# வித்தகர்



வெளியீடு
இந்துமாமன்றம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்
2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

496.


Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வித்தகர்



11538 S.C

வெளியீடு
இந்துமாமன்றம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்
2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. ஆலய வரலாறு 1

02. சமயமும் பண்பாடும் 4

03. Hanuman Worship 8

04. சிரார்த்ததினம் என்றால் என்ன? 13

05. அணிகலன்களுக்கோர் அர்த்தம் 16

06. ஒன்றே உண்மை. அதுவே பேருண்மை 18

07. நவராத்திரி மகிமையும் நவராத்திரி அலங்காரமும் 21

08. திருவாசகத்தில் காணப்படும் அறிவியல் சிந்தனைகள் ஓர் நோக்கு. 24

09. பிள்ளையாரை மட்டும் சாலை ஓரத்திலும் மரத்தடியிலும் வைத்து கும்பிடுகின்றோம். அது சரியா? தலையில் குட்டிக் கொள்வது ஏன்? 28

10. ஆன்மீகமும் அறிவியலும் 30

11. ஆலய வழிபாடு 36

12. பண்ணிசை 39

13. பழங்களை உதிர்த்த பால முருகன் 43

14. தியானம் ஒரு மன நோய் நிவாரணி 46

15. சிந்தனை, சொல், செயல் 48

16. திருக்கோவில் அமைப்பும் தத்துவமும். 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடாதிபதியின் ஆசியுரை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி இந்து மாமன்றத்தினால் வெளியிடப்படுகின்ற "வித்தகர்" எனும் நூலானது நல்லபடி வெளிவர இறைவனின் அருள் கிடைக்க உளமார ஆசி கூறுகின்றேன்.

உண்மையில் கல்லூரியின் வரலாற்றில் இந்து மாமன்றத்தினரால் வெளியிடப்படுகின்ற முதல் நூலாகும். முன்னைய காலங்களில் இப்படியானதொரு முயற்சி முன்னெடுக்கப்படாமல் இருந்த போதும் தற்போது இருக்கின்ற இந்து மாமன்றத்தினர் எடுத்த இம்முயற்சி பாராட்டிற்குரியதாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்கு அப்பால் ஆன்மீக உணர்வை வளர்த்துக் கொண்டு வரும் எமது கல்லூரி கல்வியலாளர்கள் முகிழ்நிலை ஆசிரியர்கள் ஆகியோரது ஆக்கங்களை இந்நூல் சுமந்து வருவது அவர்களிர்க்கு கிடைத்த பேறாகும்.

இன்றைய காலச்சூழ்நிலையில் சமய அனுட்டான விதிமுறைகள் பல பின்பற்றப்படாமலும் பல மறைந்து போகும் நிலையிலும் இப்படியானதொரு நூல் வெளிவருவது சாலச்சிறந்ததாகும். அந்த வகையில் இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைவருக்கும் ஆசி கூறி இனிவரும் காலங்களிலும் இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வாழ்த்துகின்றேன்.

நன்றி.

S.K. யோகநாதன்
பீடாதிபதி
யாழ் தேசிய கல்வியியற்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் ஆசிச்செய்தி



யாழப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி 02.05.2000 ஆம் ஆண்டு ஆரம்பமானதில் இருந்து அதனை முழுநிறைவாக கட்டி முடிக்கும் வரை எனது அர்ப்பணிப்புக்கு துனையாகவும் ஊன்று கோலாகவும் இருந்த உயர் சக்தி வித்தக விநாயகரும் முடிமன்னர் வைரவ சுவாமிகளும் தான். எத்தனையோ தடைகள் பிரச்சினைகள் இவற்றையெல்லாம் வெற்றி கொண்டு இக்கல்லூரியையும், வித்தகவிநாயகர் முடிமன்னர் ஆலயத்தையும் கட்டி முடித்த நிறைவில் தற்போது இந்துமாமன்றத்தினரின் "வித்தகர்" என்ற மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். வித்தகவிநாயகர், முடிமன்னர் ஆலயங்களைக்கட்டி 31.08.2003 ஆண்டு குடமுழுக்குக் கும்பாபிஷேகம் செய்த போது ஒரு மலரை வெளியிட்டிருந்தோம். தற்போது இம்மலர் வெளிவருவது முகிழ்நிலை ஆசிரியர்களின் ஆன்மீகத்தேடலை நிறைவு செய்வதாகவுள்ளது. எமது பிரதேச கல்வியை விருத்தியாக்கவும், இளம் ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தை உயர்த்தவும் வதிவிடத்துன் கூடிய பயில்வை கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரியர்கள் மேற்கொள்கின்றனர். அதன்போது அவர்களின் ஆன்மீக விழுமிய தேவைகளை பூர்த்தி செய்யவே இக்கோவில்களை விநாசித்தம்பி ஐயா அவர்களின் அருளாசியுடன் கட்டி முடித்தேன். கோவில்களிலே நடைபெறுகின்ற விழாக்கள், பூசைகள் முகிழ்நிலை ஆசிரியர்களது உள்ளத்தை பண்படுத்தும். அத்தோடு இந்து மாமன்றத்தினரின் பல்வேறு செயாற்றுகைகள் மூலம் எமது இந்துமதத்தை வளர்க்கவும் முகிழ்நிலை ஆசிரியர்களிடையே சமயப்பற்றை ஏற்படுத்தவும் முடியும். இப்போக்கை மேலும் விஸ்தரிக்கும் நேக்குடையதாக "வித்தகர்" மலர் வெளியீடு அமைகின்றது. இம்மலரை சிறப்பாக வெளிவரச் வழிகாட்டிய பீடாதிபதி, மன்றக்காப்பாளர், மன்ற அங்கத்தவர்கள் அனைவருக்கும் நல்வாழ்வும் இறையாசியும் கிடைப்பதாக.

கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்
முன்னாள் பீடாதிபதி
யாழ் தேசிய கல்வியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபபீடாதிபதி வாழ்த்துரை
## (கல்வியும் தரமேம்பாடும்)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி இந்துமன்றத்தினால் வெளியிடப்படுகின்ற "வித்தகர்" எனும் நூலானது சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றேன்.

எமது கல்வியற்கல்லூரியின் மன்றங்களில் இந்துமாமன்றமும் ஒன்றாகும். இது மிகவும் சிறப்பாக தனது அனுட்டான சேவைகளை செய்து வருவதோடு முறையாக சமய அனுட்டான விதிகள் விழாக்கள் என்பவற்றையும் கடைப்பிடித்து வருகின்றது. இலங்கையிலுள்ள கல்வியற்கல்லூரிகளில் இந்து சமயத்தவர்கள் அதிகம் கற்கும் கல்லூரியாக மாத்திரமின்றி இந்து சமயத்தை வளர்க்கும் பொக்கிஷமாகவும் யா.தே.க.கல்லூரி விளங்குகின்றது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. இந்த வகையில் கல்லூரி வரலாற்றில் இந்துமாமன்றத்தினால் வெளியிடப்படுகின்ற முதன்நூல் இதுவாகும்.

இந்நூல் வெளிவருவதற்கு அனைத்து வழிகளிலும் உதவிய
போசகர் :- திரு. S.K. யோகநாதன் (பீடாதிபதி)
காப்பாளர் :- திரு. மா. பிரபாகரன் (கல்வியலாளர்)
தலைவர் :- கி. கலைச்செல்வன்
பதிப்பாசிரியர் :- த. சிந்துபானு
செயலாளர் :- ந. நந்தகோபால்
பொருளாளர் :- ஐ. கதிஸ்கர்

மற்றும் மன்ற உறுப்பினர்கள், ஆக்கவாதிகள் முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பா. தனபாலன்
உபபீடாதிபதி
கல்வியும் தரமேம்பாடும்
யாழ் தேசிய கல்வியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றக்காப்பாளரின் வாழ்த்துரை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின் இந்து மன்றத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல் வெளியாகும் மன்றத்தின் முதலாவது மலராகிய "வித்தகருக்கு" வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

கல்லூரி வளாகத்தில் கம்பீரமாக அமர்ந்து அருள் பாலித்து வரும் அப்பன் விநாயகரும் முடிமன்னன் வைரவரும் கல்வியற்கல்லூரியின் செயற்பாடுகளிற்கு உறுதுணையாக இருப்பது மட்டுமன்றி எதிர்கால நல்லாசான்களின் ஆன்மீக விருத்திக்கான பல்வேறு செயற்பாடுகளிற்கு வழி சமைத்து தந்துள்ளனர். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாக வித்தக விநாயகர் மிளிர்ந்து வருவது அவரின் அளவற்ற அருளுக்கு மிகச்சிறந்த சான்றாகும். கோவிலில் நித்திய நைமித்திய செயற்பாடுகளில் முகிழ்நிலை ஆசிரியர்களின் உள்ளார்ந்த பக்திபூர்வமான பங்களிப்பு மன்ற கலைத்திட்டத்தின் ஓர் அம்சமாகும். 'அவனருளாலே அவன்தாழ் வணங்கு' என்பதற்கோர் எடுத்துக்காட்டாக கோவில் உருவாகிய புதுமையும் அதனை பேணிப் புதுமெருகூட்டிவரும் ஆசிரியர் செயற்பாடுகளும் அமைந்துள்ளன. நாம் செய்யும் வினைகள் யாவும் எமக்கே என இம்மலரினை பிறவிப்பேறாக கருதி வெளியிடும் இந்து மன்றத்தின் களிப்பில் நானும் பங்கு கொள்கிள்றேன்.

இவ்வாக்கத்திற்கு தமது ஆத்மார்த்த ஆதரவை நல்கிய பீடாதிபதிக்கும் எமது ஆன்மீக செயற்பாட்டிற்கும் களம் சமைத்த முன்னாள் பீடாதிபதிக்கும் இவ்வாக்கம் சிறப்பாக வெளிவர முன்னின்று உழைத்த நூலாசிரியர், இந்துமன்றத்தினர் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இப்பணி மேலும் சிறப்புற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

மா. பிரபாகரன்
இந்துமன்ற பொறுப்பு விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத்தலைவர் உள்ளத்திலிருந்து...



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இந்து மன்றத்தினரால் வெளியிடப்படும் "வித்தகர்" எனும் நூலானது வெளிவருவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விச் செயற்பாடுகளிற்கு உறுதுணையாக இருந்து அருள் பாலிக்கும் வித்தக விநாயகனின் அருட்கடாச்சம் பெற வேண்டி இங்குள்ள பலராலும் பல செயற்பாடுகள் அனுட்டானங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் சமயம்சார் நூல் ஒன்று உதயமாவது முதற்தடவையாக இருப்பதால் "வித்தகர்" எனும் இந்த நூலே ஆகும். இந்நூலின் வருகைக்காக பல்வேறு நாட்களாக நமது மன்றத்தினர் அரும்பாடுபட்டார்கள். கல்வியலாளர்கள் முகிழ்நிலை ஆசிரியர்கள் போன்றோர்களின் ஆக்கங்களை சுமந்து இந்நூல் வெளிவருகின்றது.

சமய ஆன்மீக உணர்வுகளை ஓரளவாவது இந்நூல் மக்களிடத்தில் ஏற்படுத்தும் எனில் அது இம்மலர் குழுவினராகிய எமக்கும் ஆக்கவாதிகளுக்கும் கிடைத்த பெரும் வெற்றியே! இந்நூலாக்க முயற்சிக்கு உதவிய பீடாதிபதி, உபபீடாதிபதி, கல்வியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கி. கலைச்செல்வன்
இந்துமன்றத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியரின் மனதிலிருந்து...



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இந்து மன்றத்தினரால் வெளியிடப்படும் "வித்தகர்" பல இந்து தர்மக்கோட்பாடுகளையும் இந்து சமய வழக்குகளையும் உருவாக்கப்பட்டுள்ளது.

இது எமது முகிழ்நிலை ஆசிரியர்களின் ஆக்கங்களையும் கல்வியலாளர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கி வெளிவருகின்றது. இதனை வெளியிட எமது பீடாதிபதி அவர்களும், மன்றக்காப்பாளர், கல்வியலாளர்களும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் தந்து இந்நூல் வெளிவர உதவினார்கள்.

இந்நூலானது சமூகத்தில் இந்து சமயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சமயச்சடங்குகள் பற்றிய தெளிவையும் ஏற்படுத்தவும் உதவும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்துடன் சிறந்த முறையில் இதனை பதித்துத் தரும் **SSR** பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர் பாராட்டிற்குரியவர்கள். இறுதியாக இந்நூல் வெளிவர என்னுடன் தோளோடு தோள் நின்ற அனைவருக்கும் நன்றிகள்.

நன்றி.

செல்வி. த. சிந்துபானு
பதிப்பாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாமன்றம் - 2008



இருப்பவர்கள்:- செல்வி.த.சிந்துபானு (பதிப்பாசிரியர்), திரு.மா.பிரபாகரன் (காப்பாளர்), திரு.S.K.யோகநாதன் (பீடாதிபதி), திரு.பா.தனபாலன் (உப பீடாதிபதி) திரு.கி.கலைச்செல்வன் (தலைவர்).

நிற்பவர்கள்:- திரு.ந.நந்தகோபால் (செயலாளர்), திரு.ஜ.கதீஸ்கர் (பொருளாளர்), திரு.ந.சிவா (உப தலைவர்), திரு.செ.நிஷாந் (உப செயலாளர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாறு

*-க.ரட்ணேஸ்வரன்*

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் சமூகத்தினர் செந்த வளாகத்திலேயே வழிபாடு நடத்துவதற்கென பெரும் முயற்சியுடன் அமைக்கப்பட்ட வித்தகவிநாயகர் ஆலய வரலாறு வித்தியாசமானது. அது ஓர் அருட்கொடையாக அபூர்வ ஸ்தலமாக தோற்றம் பெற்றது.

கல்லூரியின் முதலாவது கட்டிடத்தொகுதி இறையாட்சி நடாத்த தீர்மானித்த 19.01.2003 தைப்பூச நாளன்றே வித்தகவிநாயகர் ஆலயத்தின் அத்திபாரக்கல் சிவநெறித் தவமகன் செஞ்சொற் செல்வரால் நாட்டப்பட்டது. கல்லூரியின் முதல் பீடாதிபதி கலாநிதி. தி. கமலநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் எவ்வாறு இவ்வாறான ஒரு கல்லூரியை கொண்டு வர முயற்சி செய்தாரோ அவ்வாறான ஒரு முயற்சியின் தோற்றுவாய் தான் இந்த வித்தக விநாயகர் ஆலயம் என்பது இங்கே முக்கியமாக குறிப்பிட வேண்டும். செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுடன் முதற்பீடாதிபதி அவர்கள் கல்லூரி வளாகத்தில் இவ்வாறான ஓர் ஆலயம் பற்றி கலந்துரையாடியபோது அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் லண்டன் சிவயோகம் அறக்கட்டளையின் மேலான அனுசரணையுடனும் கல்லூரி வளாகத்தில் உடனடியாகவே இவ்வாலயப் பணிகள் ஆரம்பமாகி முடிவுற்றது.

கலாநிதி கமலநாதன் அவர்களை ஆசிக்கின்ற குரு "அருட்கவி விநாசித்தம்பி ஐயா" அவர்கள் கட்டிட அமைவு மற்றும் விக்கிரகங்கள் பற்றியும் அவருக்கு கூறினார். "உங்கள் கோயிலுக்கு வித்தக விநாயகரையும் பரிவார மூர்த்திகளாகத் சரஸ்வதியையும் முருகனையும் ஞான வைரவனையும் வைத்து வணங்குங்கள். அருகில் உள்ள முடிமன்னர் வைரவருக்கும் தனியாகத் கட்டிடம் அமையுங்கள். அருகில் இருக்கும் வேப்ப விருட்சத்தை வெட்டி விடாதீர்கள்" என்று தன் ஞானத்தால் கூறினார். (இது வரைக்கும் கோயில் பற்றியோ அங்குள்ள வேப்பமரம் பற்றியோ அவருக்குத் தெரியாது). மறு நாள் கல்லூரிக்கு நேரில் வந்த அருட்கவி ஐயா அவர்கள் விநாயகர் கோயில் அமைக்கப்படவுள்ள இடத்தினையும் அதன் அளவுப் பிரமாணங்களையும் தந்து சென்றார். இதனடிப்படையில் தைப்பூசத் திருநாளன்றே அத்திபாரம் இடுவதென்று முடிவானது அந்நாளில் இறையாட்சி வைபவத்துக்குரிய இறைபடங்கள், கும்பம், திருவிளக்கு என்பன நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து எடுத்து வரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாகத்துக்குரிய மாணிக்க ஐயா விசேடபூசை வழிபாடுகள் செய்தார். கட்டடப்பணிகள் ஆரம்பம் அன்றே சிவயோகம் அறக்கட்டளையினரிடம் இருந்து முற்பணமாகத் ரூ.3 லட்சம் சிவநெறித் தவமகனால் பெற்றுத் தரப்பட்டது. தைப்பூச நாள் பகல் 12 மணிக்கு சிவநெறித் தவமகனால் அத்திபாரமிடப்பட்ட கட்டிடத்துக்கு மேசன் எவரும் இல்லை. கோயில் கட்டும் ஸ்தபதிகளும் நியமிக்கப்படவில்லை. பீடாதிபதி மேசனானார். திரு. கே. தர்மராஜா சடங்குகளை ஆற்றினார். இது ஓர் சாதனை தான்.

கோயில் கட்டும் பணிக்கு ஸ்தபதி தேவை. அராலியில் இருக்கும் மந்திரம் என்பவர் பணியாற்றினார். இவரைக் காண்பதற்கு அராலி செல்லும் போது பெருமழை, வெள்ளம் கடந்து சென்று பட்ட அனுபவமே பீடாதிபதிக்கு பயங்கரமானது. இவ்வாலயக் கட்டிட நிதிக்காக ரூபா 2 லட்சம் இந்து காலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்டது என்பது நன்றிக்குரியதாகும். இது முடிமன்னர் ஆலயத்திற்கென ஒதுக்கப்பட்டது. இந்த முடிமன்னர் வைரவர் என்பவர் சிறப்பானவர் புதுமையானவர் என அவ்வூர் அயலவர் கருதுவர். வேப்ப மர நிழலில் ஒரு சூலம். முதலில் இதை அகற்றுவதாய் இருந்த போதும் சில புதுமைச் செயல்களால் அதை அகற்ற முடியவில்லை. அதற்கென ஒரு கட்டிடம் அமைத்து சூலத்தை அதில் நிறுவி வழிபாடு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு வெள்ளியும் வைரவருக்கு பொங்கல் செய்யப்படுகின்றது. கொழும்பில் முகத்துவாரப் பகுதியில் வித்தக விநாயகருக்கான விக்கிரகங்கள் பெறப்பட்டன. இந்தியாவின் மகாபலிபுரத்தில் உருவாக்கப் பெற்ற விக்கிரகங்களான 24 அங்குல உயர விநாயகர், 18 அங்குல உயர சரஸ்வதி மற்றும் பாலமுருகன் விக்கிரகங்கள் பெறப்பட்டன. நாயன்மார்க்கட்டு பேச்சியம்மன் ஆலயத்தில் கும்பாவிஷேக நாள் வரை விக்கிரகங்கள் சயனம் செய்தன.

எல்லா வேலைகளிலும் சிவநெறித்தவமகனும் டாக்டர் லயன். வை. தியாகராஜாவும், உபபீடாதிபதி தனபாலனும் அதிகம் பங்கேற்றனர். வர்ணம் பூசுவது தொடக்கம் பல வேலைகளில் கல்லூரி மாணவர்களே ஆர்வத்துடன் ஈடுபட்டனர். நல்லூர் இந்து மதக்குரு பீடாதிபதி கும்பாவிஷேகத்திற்கு தேவையான பொருட்களைத் தந்தார். விரிவுரையாளர் சத்தியபாலனும் இணைந்து கும்பாவிஷேகப் பணிகளில் ஈடுபட்டனர். கல்வி சாரா ஊழியரும் உதவினர். லீவு காலம் ஆகையால் விரிவுரையாளர் உதவி மட்டாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.08.2003 விநாயகர் சதுர்த்தியன்று மிகச்சிறப்பாக கும்பாவிஷேகம் நடையெற்றது. துர்க்கா துரந்தரி, சிவநெறித் தவமகன், மனோன்மணி சண்கதாஸ் ஆகியோர் ஆசி வழங்கினர். கும்பாவிஷேகம் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இறுதிநாள் மாணவர்களின் சங்காபிஷத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. திருப்பணி நடைபெற உதவிய பெருமனிதர் (சிவயோகம் அறக்கட்டளை) 10.10.2003 இவ் கல்லூரிக்கு வந்து கோயிலைப் பார்வையிட்டு வணங்கி மகிழ்ந்தார்.

இவ்வாறு தொடங்கிய கல்லூரியின் வித்தக விநாயகரின் அன்றாட வழிபாடுகள் இன்றுவரை தொடர்கின்றன. பூசைகள் தினமும் நடைபெறுகின்றன. விஷேடநாள் விழாக்கள், கிரியைகள் யாவும் குறைவற்று நிறைவேறுகின்றன. முன்னாள் பீடாதிபதி கலாநிதி. கமலநாதன் எவ்வாறு தனது இறைநம்பிக்கையிலும் வழிபாட்டிலும் மாணவருக்கு வழிகாட்டினாரோ அதே போல் இன்றும் தளர்வில்லாமல் தற்போதைய பீடாதிபதி எஸ்.கே. யோகநாதனும் செயற்படுகின்றார். ஆரம்பத்தில் திருமதி ஜெ.தியாகலிங்கம் அவர்கள் இந்துமன்றக் காப்பாளராக இருந்து திறம்பட தமது பணிகளைச் செய்தது போல் இந்துமன்றக் காப்பாளராக தற்போது மா.பிரபாகரனும் சிறந்த முறையில் செயலாற்றுகின்றார். மன்றத்தின் சகல உறுப்பினர்களும் அனைத்து மாணவர்களும் நிறைவான பங்களிப்பையும் பிரார்த்தனைகளையும் மேற்கொள்கின்றனர்.

ஆதாரம்:-
வித்தக விநாயகர் ஆலய வரலாறு
-கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்-
மகா கும்பாவிஷேகச் சிறப்பு மலர் - 31.08.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் பண்பாடும்

திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா
கல்வியலாளர்.

ஒருவனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் சாதனங்கள் பல. அவற்றுள் சமயமும் ஒன்றெனக் கூறுதல் மிகையாகாது. சமயம் என்பதற்கு எத்தனையோ வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. "மனிதன் தனது வாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்பங்களில் இருந்து விடுதலை அடைவதற்கு சாதகமாகவுள்ள வாழ்க்கை வழி சமயம்" என்றும் மனிதன் தன்கீழான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு நற்சிறந்தனைகளில் வாழ்ந்து வாழ எடுத்துக்கொள்ளும் பிரயத்தனமே சமயம் எனவும் கூறுவர்.

மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் சமயம் அவசியம். "சமயத்தை சமுதாயத்தில் இருந்து எடுத்து விட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டமே" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் "எமில்டுர்கைம்" என்பவர் சமயம் என்பது புனிதமான ஒன்றைப்பற்றிய நம்பிக்கைகளும் செயன்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என்கின்றார். இக்கருத்தை மேலும் வலியுறுத்துவதாக "ஒடியா" என்பவர் பகுத்தறிவுக்கு உட்படாததுமான செயலறிவுக்கு உட்படாததுமான ஓர் உலகத்துடன் தொடர்பு கொள்ள ஏற்படுத்திக் கொண்ட முறையே சமயம் என வரையறை செய்கின்றனர்.

சமய நம்பிக்கைகள் முன் வரலாற்றுக் காலந் தொடங்கி இன்றுவரை மனித சமுாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்ததோ அங்கெல்லாம் மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் மனித மனத்தைப் புனிதமாக்கி நல்ல மனப்பாங்கை அமைத்துக் கொடுப்பதில் சமயமானது முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இறைவழிபாடு, தியானம் மற்றும் பல்வேறு சமய சம்பிரதாயங்களும் மேற்குறிப்பிட்ட தன்மையை மனிதனில் உருவாக்க முயலுகின்றன. மனிதன் இவற்றின் உபயோகத்தை நன்கு பயன்படுத்தி தனது உளத்தூய்மையை வலுவடையச் செய்தல் வேண்டும். அந்த வகையில் சமயங்களின் உட்கிடைத்தான மண்ணில் நல்ல வண்ணம் வாழவழி கொடுத்த உதவுகின்றது. ஆகவே ஆன்மா ஈடேற்றத்திற்கு சமயம் வழி வகுக்கின்றது. மேலும் சமயத்தை பின்பற்றுவோர் மட்டும் ஈடேற்றத்தை அடைய முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அது கூறவில்லை. நதிகள் பலவாயினும் இறுதியில் சமுத்திரத்தில் கலப்பது போல் அல்லது விளக்குகள் பலவாயினும் அடையும் இலக்கு ஒன்றே என்பதனை அடிநிலையாகக் கொண்டு திகழ்கின்றது என்பதை இறைவன் ஒருவனேயாவான். முனிவர்களும் ஞானிகளும் அவனைப் பல்வேறு பெயர்களால் வழிபடுகின்றனர் என்பது இந்து சமயம் காட்டும் தத்துவமாகும். ஆகவே சமயம் என்பது மக்களை நல்வழிப்படுத்தவும் ஒழுக்கசீலர்களாக வாழவும் வழிகாட்டியாக விளங்கியுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

"Culture" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சமமாகப் ''பண்பாடு'' என்ற தமிழ்ச்சொல் வழங்கப்பட்டு வருகின்றது. இச்சொல்லுக்குரிய தமிழ்ப்பதத்தினை ஆக்கியளித்தவர் இரசிகமணி டி.கே.சிதம்பரமுதலியார் ஆகும். பண்பாடு என்னும் பதத்திற்கு எஸ்.வையாரிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். ''Culture'' என்பது ஆங்கிலத்தில் இரண்டு பொருட்களில் வழங்கப்படுகின்றது. ஒன்று தொன் மக்களின் நூலில் வருவது மக்களின் ஆதிவரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள் முதலியனவும் வெளிப்படுத்தும் அறிவு நிலையே எனக்கூறுகின்றார். மற்றையது மக்களது 'அறிவுநலம், கருத்துநலம், குணநலம், கொள்கைநலம், ஒழுக்கநலம் முதலியன மென்மேலும் திருந்திய நிலையேயாகும் எனக்கூறுவார். "டேலர்" என்பவர் பண்பாடு அல்லது நாகரீகம் என்பது ஓர் இனமக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்காறு, சட்டம், மரபு மற்றும் திறன்கள் உள்ளடங்கியது எனக் கூறுவர். "மலினோலியசி" என்பவர் ஓர் இனத்தின் பாரம்பரியமான பயன்பாட்டுக் கருவிகள் பொருட்கள் தொழில்நுட்பத்திறன் கருத்துக்கள் நடத்தைப் பெறுமானங்களின் கூட்டு மொத்தம் என்கின்றார். ஆகவே பண்பாடு என்ற சொல் தமிழில் அமைந்திருக்கும் மாற்றினை நோக்கினால் அது "பண்" என்ற வினையடியையும் பாடு என்ற தொழில் பெயர் விகுதியையும் கொண்டு உருவானதாகும். பண் = செய்+பாடு = செய்தல் எனும் பொருளது குறித்தோர் இனமோ சமுதாயமோ தனது அறிவாலும் அனுபவத்தாலும் சிந்தனைத்திறத்தாலும் தனக்கென வகுத்துப்பேணி வரும் செயற்பாடே பண்பாடென்றாலும் இதன் பரிணாமமாகச் சமயநெறி, தத்துவநோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள் என்ற பலவும் வெளித்தோற்றுகின்றன. அந்த வகையில் ஓர் இனத்தின் பண்பாடு அந்த நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றால் விளக்கமுறுகின்றது. அந்த வகையில் சமயம், பண்பாடு என்ற இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பினை எடுத்து நோக்குவோம் ஆயின் பண்பாட்டின் பிரதான கூறுகளுள் ஒன்றாக சமயம் விளங்குகின்றது. பல தன்மைகள் கூறுகள் பண்பாட்டில் அடங்கியிருந்த போதிலும் மக்களின் வாழ்க்கை பெருமளவில் சமயத்தையொட்டி இருத்தலின் பண்பாடும் சமயத்தையொட்டி இருப்பதைக் காணலாம். எனவே சமயத்தின் அடிப்படையிலேயும் பண்பாடு தோன்றும் எனக்கூறுவது பொருத்தமுடையதொன்றாகும்.

"டி.எஸ். எலியட்" என்பவர் சமயத்தினின்று தோன்றிய பொருளே பண்பாடு. பண்பாட்டினின்று தோன்றிய பொருளே சமயம். சமயத்தின் அமைப்பே பண்பாடு எனக் கூறினார். அந்த வகையில் மக்களுடைய வாழ்க்கையிலே பெருமளவு சமயத்தை ஒட்டிய விடயங்கள் இருந்ததை காணலாம். ஒருவர் பிறந்தது முதல் இறக்கும் வரையும் இறந்தவர் பின் ஆத்மீக நிலையிலும் சமயச்சார்புடைய நம்பிக்கைகள் மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்திருப்பதை அவதானிக்கலாம். சிறப்பாக தென்னாசியாவிலுள்ள நாடுகளில் நாம் குறிப்பிட்ட சமயச்செல்வாக்கு காலம் தோறும் மக்களது வாழ்க்கையில் இடம் பெற்று வந்துள்ளது. எனவே அவற்றின் தார்பரியத்தை நோக்கும் பொழுது ஒரு இனத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு சமயமே அடிப்படையாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக இந்துசமயக் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது அறச்சார்பு, ஆன்மீகநலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் முறையாக சமயம் அமைந்தது. சமசம் என்பது மனிதனை வாழ்க்கையில் நிறை மனிதனாகச் செய்வதாகும். இதற்காகவே சமயத்துடன் மறைநூல்கள், புராணம், தோத்திரம் போன்ற சமயநூல்கள், சமயநிறுவனங்கள், சடங்குகள், திருக்கோயிற் பண்பாடுகள் போன்றவை மக்கள் மத்தியில் சமயம் சார்ந்த அறிவையும் சாதனையையும் ஏற்படுத்தியுள்ளன. அந்த வகையில் ஆகமம் சுட்டும் பண்பாடு திருக்கோயில் பண்பாடாகும். இப்பண்பாட்டின் நிலைகளாகச் சிவாலயங்கள் சிறப்படைந்தன. இவை சைவபக்தி இயக்கத்திற்கு நிலைகளாக விளங்கியவை.

ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டே கோயில் வழிபாடு பற்றியும் அமைப்பு பற்றியும் திருமூலர் சிறப்பாக குறிப்பிடுகின்றார். தூலலிங்கம், சுக்குமலிங்கம், பத்திரலிங்கம் ஆகியவை பற்றியும் கோயிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகள் நிறைவேறாது விடின் வரும் கெடுதல் பற்றியும் கூறுகின்றார். மேலும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட பல கோயில்கள் ஒரு பிரதேசத்தில் காணப்படினும் அக்கோயில்களின் கட்டிட அமைப்பு வழிபடுவதற்கான இறைவனது திருவுருவ அமைப்பு மற்றும் அங்கு நிகழும் நித்தியநைமித்திய கிரியைகள் ஆகியவற்றின் சிறப்புகளிற்கு ஆகமங்களே அடிப்படை என்று கூறுவது பொருத்தப்பாடு உடையதொன்றாகும். எனவே தான் ஆகமங்கள் திருக்கோயிற்கலை பண்பாட்டின் கலைக்களஞ்சியமாக விளங்குகின்றது என்று கூறினால் மிகையாகாது. மேலும் இந்துப்பண்பாடு என்ற உன்னத மாளிகையின் உறுப்புக்களாய் விளங்கும் உண்மை வழி நிற்றல், உயிர்களுக்கு ஊறுகள் செய்யாமை, ஒழுக்கம், சமூகத்தொண்டு, மாதா, பிதா, குரு, மூத்தோர் என்போரை வழிபடல், பிதிர்க்கடன் செய்தல், சமயக்கிரியைகளைத் தவறாசியற்றல் என்பவை சமயத்தோடு இயைந்த பண்பாட்டு அம்சமாகும். இந்துப்பண்பாடு அழியாது இன்றும் நிலைத்திருப்பது பண்பாட்டின் உறுதித்தன்மையும் மக்களது சமய நம்பிக்கைகளும் என கூறினால் மிகையாகாது.

பல்வேறு அந்நிய படையெடுப்புக்கள் வந்த பொழுதும் இந்து சமயம் ஆலமரமெனத் திகழ்கின்றது. அதற்கு காரணம் சமயத்தோடு இயைந்த பண்பாட்டை பேணியதாகும். ஆகவே சமயம் என்பது இந்துப்பண்பாட்டின் சீரிய கூறாகும். சமயத்தைப் புறக்கணித்தால் இப்பண்பாடு பொருளற்றதாகிவிடும். இது தருமம் என்ற உயரிய கோட்பாட்டை தன்னுள் பெற்றுள்ளது. மேலும் அறிவியலுக்கும் எதிரியன்று. ஆகவே சமயமும் பண்பாடும் இணைந்த சீரிய நற்பண்புகளைக் கொண்டு விளங்குவது இந்துப்பண்பாடு என்றால் மிகையாகாது. ஆகவே சமயமும் பண்பாடும் ஒரு மனிதனின் வாழ்வியலுக்கு அவசியம் என்பதோடு இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பொருந்திப் இந்துப்பண்பாட்டிற்கு பெருமை சேர்க்கின்றது என்று கூறுவது பொருத்தமுடையதாகும். ஆகவே சமய அனுபவமும் பண்பாட்டு அனுபவமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாத ஒரு பொக்கிஷம் ஆகும்.

நன்றி.

உசாத்துணை நூல்கள்:

01. இந்து வாழ்வியல் - ப.கணேசலிங்கம் - 2002
(சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்)
02. மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் - குமாரசாமி சோமசுந்தரம்
(எலெக்ரோ டெக் அச்சகம் - தெகிவளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hanuman Worship

**yatra yatra raghunatha kirtanam;**

**Tatra tatra kritha masthakanjalim;**

**Bhaspavaari paripurna lochanam;**

**Maarutim namata raakshasanthakam**

Hinduism has become a global tradition. Though it is considered a minority tradition in Sri Lanka, it is the dominant religion in South Asia and it is the oldest surviving religion in the world. It neither originated from a single founder or a single scripture nor did it begin at a particular point in time. It is said to be a huge tree with its numerous branches representing various schools of religious thought.

Hindus believe in the existence of one and only one Supreme Being but they worship him in various forms of deities or gods. They realize that all beings are different manifestations of the reality. According to Hinduism, Puja, worships of deities, is conducted to an idol made of gold, silver, bronze or even clay. Those who can not afford these, worship the gods in paintings or pictures. Further, it is true that stones are worshipped, and the Elephant-God Lord Ganesha, and the Monkey-God Hanuman too are worshipped. Since god is omnipresent, he should be present in stones, animals i.e. everywhere. It is good to note that that a person sees divinity in every aspect of creation whether it is animate or inanimate. True worshippers would, without any doubts, consider them as one and the same.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hanuman, the monkey God is considered 'Chiranjeevi', is strong, full of valour with various skills and powers. He is humble, brave, a great yogi, a bachelor, a profound scholar and wise. The weapons of Sri Hanuman are mace, sword, rope, ankusam (goad), trisul (trident), stambham, tree, khadvankam, mountain, and fist. He had devotion, knowledge, spirit of selfless service, power of celibacy, and desirelessness. He never boasted of his bravery and intelligence. He is known as Anumandhayya, Aanjaneyan, Maruthi, Anumandhan, Vaayunandhan, Kesarinandhanan Pavanasuta, Marutsuta, Pavankumar, Bajrangabali, Mahavira and Siriya Thiruvadi. He is considered to be the eleventh reincarnation of Lord Siva.

Hanuman is said to be the son of wind-god Vayu Deva and Anjana Devi. He is worshipped in the temples as Bhaktha Hanuman holding both hands together in prayer and Veera Hanuman holding the mace in one hand & the sanjeevi Parvatham in the other. Anjaneyar is generally worshipped with offerings of butter & Vadaimalai (a garland of vadais). Butter is applied to the mouth & tail of Hanuman vigrahams in temples. Devotees pray to the Lord & apply dots of kumkumam to his tail from the starting point to the tip of the tail to pictures at home. Hanuman, himself is a great devotee of Sri Rama, is the symbol of devotion and dedication. He is very happy when he hears the name of Rama. Hence, repeating the Ram name 'Sri Rama Jeyam' is the best way to get his blessings.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In the Hindu epic Ramayana, Hanuman is the great monkey hero who assists Rama in his battle with Ravana. He played a major role in the happenings in Ramayana and featured in the other epic Mahabaratha by being present in the flag flying in the Arjuna's chariot and witnessing the Geetopadhesam firsthand. Hanuman symbolizes the qualities of a perfect man as conceived by the hindu mind. . If we analyse the role of hanuman in the story of Ramayana we find that he exhibits perfect qualities such as humility, admiration, nobility, understanding, mastery over ego, achievements and Nishkama-karma .

Hanuman is worshipped in all the temples of Sri Rama and worship of Sri Rama is complete only with the worship of Hanuman. Tuesdays, Thursdays and Saturdays are significant for worshipping Sri Hanuman Offering flowers, fruits, foods etc to the deity is believed as part of the worship. It is said that only items of satwic nature are offered. Tulsi, turmeric, Sandal paste, Betel Leaves Garland, Jasmine, Parijaatam, Lotus, Vadai garland, Cooked Bengal gram added with salt, with or without coconut gratings, Butter, Curd Rice, Beaten Rice, Kesari, Pongal, Paanakam and Fruits and Nuts are offered to Sri Anjaneya in order to get his blessings.

Millions of people in the world have heard of Sri Hanuman, the eternal servitor of Lord Rama. Pictures and idols of Anjaneya are found in Indonesia, Malaysia, Laos, Cambodia, China, Mauritius, Thailand, Burma, and Bali. In India and Sri Lanka separate Hanuman shrines are found in most Vishnu temples and there are separate temples too.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He is celebrated in many cultures, and different versions of his story appear in many languages. In China, he is known as Shun Wu Kong, the Wind Monkey. In Thailand, he is a central character in the Ramakiya, Thailand's most popular folktale and the story of Anjaneya is enacted too. In Cambodia, the story of Sri Rama is popular as Ramakirthi. However, there are some minor differences in the folklore in these countries.

Hanuman is revered by hindus as a perfect devotee of god. As Hanuman symbolizes the qualities of an ideal devotee of God, the worship of Hanuman paves the way for acquiring the following qualities represented by the letters of the word Hanuman and will lead us to Self-realization.

- H Humility and hope
- A Admiration (truthfulness, devotion)
- N Nobility (sincerity, loyalty, modesty)
- U Understanding (knowledge)
- M Mastery over ego ( kindness, compassion)
- A Achievements(Strength)
- N Nishkama-Karma(selfless work)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

His will, emotions, intellect and actions were perfectly refined and rooted in spirituality. The character of Sri Hanuman is relevant to our contemporary world. He has taught us how to be a perfect servant, a perfect messenger and a perfect devotee. It is a belief that his devotees are blessed with courage, valour and wisdom. More than all, he will wield a great influence over the minds of millions of people as long as the world lasts. Ultimately, he is not only a God to be worshiped but also a model to be cherished and followed by individuals in their life..

Glory to Hanuman, the blessed devotee of Lord Rama. May his blessings be upon you all.

**Mrs.S.Sivapatham**
**Senior Lecturer**
**JNCOE**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரார்த்ததினம் என்றால் என்ன?

திருமதி. ஞானசக்தி கணேசநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்

ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படுகின்ற கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்திய எனப்பொருள்படும். அபரக்கிரியைகளின் பலன்களைச் சிவாகமங்களும் புராண, இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரை பேணாது கடவுளை வழிபடல் பயன் தராது என்பது கௌசிகா வரலாறு மூலம் அறியலாம். இல்லறத்திற்குரிய முக்கிய கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை "தென்புலத்தார்" என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்வோர் பெரும்பேறுகளும் சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசரம் தவறியவர் ஆவர். பிதிர் வருத்தின் பெருந்தீமைகள் நேரும். ஆனால் பிதிர் மனம் மகிழ்ந்தால் புத்திரப்பேறு, செல்வம், ஆரோக்கியம், கல்வி, கீர்த்தி முதலிய சகல சமபத்துக்களும் கிடைக்கும் என்பது ஆன்றோர் வாக்கு.

11538.5.C

## எள்ளும் தர்ப்பையும்

யஜ்ஞ வராக மூர்த்தியாகத் தோன்றிய மகாவிஷ்ணுவின் மனதிலிருந்து எள்ளும் பிராணிலிருந்து நீரின் சாருமான தர்ப்பையும் தோன்றின. அசுரர் குலத்திற்கு அந்தகன் என்று கூறினாலே அரக்கர் பயந்தோடுவர். ஆதலினால் சிராத்த காலத்தில் சிராத்த சம்ரஷ விஷ்ணுவை அழைக்கின்றோம். அவரிடம் உண்டான எள்ளையும் தர்ப்பையையும் உபயோகித்தால் அசுரர்கள் நெருங்க மாட்டார்கள். ஆதலால் சிரார்த்தம் செய்யும் இடங்களில் எல்லாம் எள்ளைத் தூவுகின்றோம். தர்ப்பை பகைவரை விரட்டக்கூடியது. அதனால் தர்ப்பை இல்லாத கருமம் இல்லை என்றே கூறலாம்.

## தென் திசையின் முக்கியத்துவம்

தென்திசை பிதிர்களுக்குரியது. பித்ருலோகத்திற்குரிய தலைவனான யமதர்மராஜன் தென்திசையிலேயே இருக்கின்றார். ஆதலால் பித்ருகர்மாக்கள் எல்லாவற்றையும் தெற்கு முகமாகவே செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரார்த்தத்தின் முக்கியத்துவம்

ஸபிண்டீகரமாவது இறந்தவரை அவரது தந்தை பாட்டன் முதலியவர்களுடன் பிண்டமளித்து சேர்த்துவிடும் கிரியையாகும். சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்வது. எனவே சிறந்த முறையிலே இவற்றை செய்ய வேண்டும். மறுவுலகில் ஜீவனுக்கு வேண்டிய வஸ்திரம், குடை, தீர்த்தபாத்திரம், பாதுகை, படுக்கை முதலிய சகல பொருட்களையும் தானம் செய்ய வேண்டும். அவை இறந்தவருக்கு கிடைத்தால் இன்பம் அளிக்கும். பசித்தாகம் அடங்குவதற்காக நித்திய சிரார்த்தம் செய்வதுண்டு. இறந்த திதியில் இருந்து 12 மாசியங்கள் செய்வர்.

## நைமித்திய சிரார்த்தம்

பிதா, மாதா முதலானோர் இறந்த தினமும் திதியும் வருடந்தோறும் வரும் பொழுது விசுவாசத்தோடு விதிப்படி செய்வது நைமித்திய சிரார்த்தம். எத்திசையில் இறந்தாரோ அத்திசையில் சிரார்த்தம் செய்தால் உத்தமம். திதி தெரியாவிடின் அந்தமாத அமாவாசை அல்லது அட்டமியில் செய்யலாம். மாதம் தெரியாது விடின் ஆடி,மாசி,புரட்டாதி,மார்கழி மாதங்களில் அத்திதிகளில் செய்யலாம். இவைகளில் எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபக்க நாட்களில் செய்த கொள்ள முடியும். (புரட்டாதி மாதத்து அபரபக்கத்து பிரதமை முதல் அமாவாசை வரையிலான காலம் மாளயபக்ககாலம் ஆகும்.

## சிரார்த்தம் செய்யும் இடம்

இறந்தவர் வீடு, திருநந்தவனம் மலை, திருக்கோயில் தீர்த்தக்கரை, குருவின் மனை போன்ற இடங்களில் செய்யலாம்.

## சிரார்த்தத்திற்குரிய பொருட்கள்

எள், நெல்லரிசி, கோதுமை, பயறு, உழுந்து, தேன், பசுநெய், பால், தயிர், நல்லெண்ணை, உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சி, கிழங்கு, வாழையிலை, வாழைப்பழம், வாழைக்காய், வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, பிரண்டை, வெற்றிலை பாக்கு போன்றவற்றை பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரார்த்தத்திற்கு பயன்படுத்த முடியாத பொருட்கள்

பீர்க்கங்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, எருமைப்பால், எருமைத்தயிர், வெங்காயம் போன்றன.

## சிரார்த்தத்திற்கு உபயோகிக்கும் மலர்கள்

துளசி, வில்பம், தாமரை, செண்பகம், அறுகு, நந்தியாவத்தை போன்றன.

## சிரார்த்ததினத்திலே செய்யத்தக்க புண்ணியகாரியங்கள்

அன்னதானம் வழங்குதல், ஆலயத்தில் இறைவனுக்கு அபிஷேகம் பூசை செய்வித்தல் போன்றனவாகும்.

## சிரார்த்ததினத்திலே செய்யக் கூடாதவை.

நெல் குத்துதல், பொருட்களைக் கொடுத்தல் வாங்குதல், கண்ணீர் விடுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

எனவே இந்து மக்களுடைய கிரியை முறைகளிலே பிதிர்க்கடன் கழிப்பது முக்கியமானது. அக்கிரியைகளைத் செய்து நாமும் பிதிரின் கடாட்சத்தை பெறுவோமாக.

உசாத்துணை நூல்கள்:
நினைவு மலர்:- வி.சி. குமாரசாமி 1978 மாசி மாதம்
நேர்காணல் மூலம்:- S. தணிகாசலம் - திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிகலன்களுக்கோர் அர்த்தம்

சமூகம் ஒன்றின் குறிகாட்டிகளாக விளங்கும் அணிகலன்கள் அச்சமூகத்தின் பண்பாட்டம்சங்களில் ஒன்றாகும். சமயம், கலை என்பதோடு வாழ்வியல் அடையாளங்களும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டின என்றே கூறவேண்டும். அணிகலன்கள் என்பது பொண்களின் அழகினை கூட்டிக்காட்டும் என்ற கருத்தோடு அவற்றிற்கு அர்த்தமுண்டு என்பதனையும் கருத்திற் கொள்ள வேண்டும். அந்த வகையில் அணிகலன்களும் அவற்றின் அர்த்தம் மற்றும் பயன்பாடுகளையும் நோக்குவோம்.

இறைவன் தந்த இயற்கைப் பொக்கிஷம் பூக்கள். இவை வெவ்வேறு வகையிலும் வெவ்வேறு வகையிலும் வெவ்வேறு நிறத்திலும் உண்டு. இவை வாசனைத்திரவியமாக பயன்படுபவையும் உண்டு. சாமந்தி போன்ற மலர்கள் அணியக்கூடாது. பிச்சி, முல்லை, ரோஜா போன்ற மலர்களால் இறைவனை அர்ச்சித்து வணங்க வேண்டும். பெண்களிற்கு அழகினை மாத்திரம் அல்லாமல் அவர்களையே இனங்காட்டிக் கொடுக்கும் அரிய சக்தி பொட்டிற்கு உண்டு. பொண்களிடையே பொட்டு வைக்கும் முறை பலவாறு இருப்பினும் அவற்றில் ஒட்டும் பொட்டு, குங்குமம் ஆகிய இரண்டிலும் அர்த்தமுண்டு. கறுப்பு நிற ஒட்டும் பொட்டு திருமணம் முடிக்காத தன்மையையும் சிவப்பு நிற ஒட்டும் பொட்டு நிச்சயிக்கப்பட்ட அல்லது காதல் வசப்பட்ட உண்மையை உணர்த்துவதாகப் பலர் கூறினாலும் திருமணம் முடித்த பெண்கள் குங்குமப்பொட்டு இடுதல் வேண்டும் என்ற பாரம்பரிய முறை நம் தமிழர் மத்தியிலே நிலவி வருவதுதான் சிறப்பு.

பொட்டினை வைப்பதால் தோஷம் நீங்கும். நெற்றியில் மாத்திரமல்லாமல் நேர் வகிட்டிலும் குங்குமம் இட வேண்டும். தலை எழுத்தை மாற்றும் சக்தி திலகத்திற்குண்டு. பொண்கள் அணியும் இன்னொரு அணிகலன் மூக்குத்தி. இதனைப் பொண்கள் தங்கத்தில் அணிவார்கள். தங்கத்தை சுவாசித்தால் காற்று தங்கத்தை தழுவிச்சென்று உடலுக்குள் உட்செல்வதால் சுவாச நோயைத் தடுக்கும். 10-20 வயதுக்குள் மூக்குத்தியினை பொண்கள் அணிவார்கள். திருமணம் முடித்ததன் அடையாளச்சின்னமாக தாலிக்கொடி விளங்குகின்றது. எத்தனையோ தங்கத்தில் தாலிக்கொடி கட்டினாலும் மஞ்சள் கயிற்றில் கட்டுவதே உண்மையான தாலிச்சரடாகும். மஞ்சள் நிறமாக சரடு இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தெய்வ வளம், நோய்த்தடுப்பு என்பன கிடைக்கும். தாலிக்கொடியில் இரண்டு காசுப்படிகளில் இறையுருவங்களை தரித்து அணிவது நடைமுறையிலுண்டு. இது அவரவர் தோசம், பொருத்தப்பாடு என்பவற்றைப் பொறுத்து அமையும்.

பெண்களின் அணிகலன்களில் அடுத்தது வளையல். திருமணம் முடித்த பெண்களும் இளம் பெண்களும் இதனை அணிவதில் வேறுபாடுண்டு. இது கணவன் வளைய வளைய வர நினைவுபடுத்தும் ஓர் அணிகலனாகும். கடும் நிற வளையல் தோஷபரிகாரம் கொண்டவை. சனி திசை பாதிப்பிற்கு நீலநிற வளையல் சிறப்பானது. கர்ப்பம் தரித்த பெண்ணிற்கு வளைகாப்பு நடத்தும் பாரம்பரியம் இந்தியரிடையே இன்றும் நிலவி வருகின்றது. திருமணமான பெண்ணிற்கு கணவன் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து திருமண நாளில் அன்று இரண்டுகால்களிலும் உள்ள இரண்டாவது விரலில் அணிவான். இதனால் கர்ப்பப்பை பலமடையும். இதுவும் திருமணம் முடிந்தமைக்கான குறிகாட்டியாகும். மோதிரம் பெண்கள் வலது கையிலும் ஆண்கள் இடது கையிலும் அணிதல் வேண்டும். பெண்களின் கண்ணழகைக் காட்டும் ஒன்று கண்மை. இதனால் கண்ணிற்கு குளிர்ச்சியும் அதிக கண்பார்வையும் கிடைக்கும்.

இவ்வாறாக தமிழ் இந்துப்பண்பாட்டு மரபில் ஆடை அணிகலன்களின் முக்கியத்தவமும் அவற்றின் அர்த்தம் நன்மை என்பன உள்வாங்கிக் கொள்ளப்படுகின்றன.

தேடல்,
ம. அனோஜா
1ம் வருடம்
விஷேட கல்வித்துறை.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றே உண்மை, அதுவே பேருண்மை

ஒன்றே ஒன்றுஇ ஒன்றே உள்ளது. அந்த ஒன்றே ஓம்! ஓம்! ஓம்! ஒன்றே பேருண்மை. அதுவே நிலையானது அதுவே எல்லாத் தோற்றங்களிலும் காட்சி அளிக்கின்றது. அதுவே யாவற்றையும் இயக்குகின்றது. யாவற்றிலும் இயங்குகிறது. அதுவே ஓம்! ஓம்! ஓம்!

நீ பேசுகின்ற ஒலிகளில் எல்லாம் அதுவே ஒலிக்கட்டும். நீ உணர்கின்ற எல்லா வகை உணர்வுகளில் எல்லாம் அதுவே உணர்வாகட்டும். உன்னுடைய நெஞ்சம் அதிலே மூழ்கட்டும். அதனுள்ளே நீ மூழ்கி இரு. அதுவே பேருண்மை. அப் பேருண்மையே ஓம்! ஓம்! ஓம்!. உன் உயிர் அக்கருத்தை உணரட்டும். துன்பத்திற்கும் இன்பத்திற்கும் இதுவே தடை. நீ காணுகின்ற காட்சிகளும், சூழ்நிலைகளும் வெறும் பொய். வெளியுலக காட்சிகளினால் நீ உன்னையே ஏமாற்றிக் கொள்கின்றாய். ஆதனால் துன்பத்தையும் நோயையும் ஏற்றுக்கொள்கின்றாய்.

இந்த ஒரே ஒரு வாக்கியத்தைக் கவனி!

இங்கே இருப்பது ஒரே ஒரு பேருண்மை. நீ நினைக்கின்ற உண்மைகளுக்கெல்லாம் இது பேருண்மை. உண்மை என்று நீ நம்புவதெல்லாம் மாயை. உன்னுடைய ஐம்புலன்கள் யாவும் உன்னை ஏமாற்றுகின்றன. சிலர் உன்னிடம் உள்ள குறைகளை கண்டு பிடிக்கலாம். உன்னை குறை கூறலாம். உன்னைத் திட்டலாம். உன்னை ஏமாற்றலாம். உன்னை புகழலாம். இவை யாவும் உண்மை அல்ல. என்றும் நிலைத்திருக்கும் பேருண்மை ஒன்று உண்டு. அதுவே ஓம்! ஓம்! ஓம்!.

ஓம்! ஓம்! ஓம்! என்று ஜபம் செய்யும் பொழுது உன்னுடைய எண்ணங்கள் கொள்கைகள் கருத்துக்கள் ஆசைகள் திட்டங்கள் யாவற்றையும் நீக்கி தூக்கி எறிந்து விடு. உன்னுடைய எல்லா வலுவையும் சத்தியையும் அந்த பேருண்மையிடம் கொடுத்து விடு. அதுவே ஓம்! ஓம்! ஓம்!. அந்த பேருண்மையே நீ என்பதை உணர்வாய். அந்த பிரணவத்திடம் நீ சரணடைந்து விட்டால், அந்த பேருண்மையான ஓங்காரம் உன்னை ஏற்றுக் கொண்டால் எல்லா இன்பமும் நானே. எல்லா அறிவாற்றலும் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உண்மையும் நானே. எல்லா ஒளியும் நானே. எல்லா ஆசைகளையும் நிறைவேற்றி வைக்கின்றவன் நானே. எல்லா ஆன்மாக்களிலும் உயர்ந்தவன் நானே. எல்லாவற்றையும் காதுகளால் கேட்பவன் நானே. கண்களால் காண்பதுவும் நானே. எல்லா உள்ளங்களிலும் நினைப்பதும் நானே. என்பதை நீ அறிவதோடு நானே எங்கும் நிலைத்திருக்கும் சர்வ ஆத்மா. நானே சர்வ சக்தி. நானே சர்வ வியாபி என்பதை அறிவாய். ஓம்! ஓம்! ஓம்!.

ஓம்! இது எதைக் காட்டுகின்றது. இப்பிரபஞ்சத்தை காட்டுகின்றது. இப்பிரபஞ்ச இயக்கத்தை காட்டுகின்றது. ஓங்காரத்தை முற்றும் உணர்ந்தவன். இப்பிரபஞ்சத்தை படைத்து இயக்குவது ஓம்! ஓம்! ஓம்!. என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுவான். ஒன்றே உண்மை. அதுவே பேருண்மை. அதற்கு பெயர்தான் ஓம்!. புனிதங்களுக்கெல்லாம் புனிதம். இந்த ஓம்! சர்வ சக்தியையும் தன்னிடத்தில் பெற்றுள்ளது. இதுவே தெய்வீகம். இதுவே தெய்வம். பிரணவத்தைச் சொல்லும்பொழுது எண்ணங்கள் அற்றவனாய் ஏதும் அறிய இயற்பொருளாய் இருத்தல் வேண்டும். ஒன்றே உண்மை. அதுவே பேருண்மை. அதுவே ஓம்! ஓம்! ஓம்!.

பிரணவத்தைச் சொல்லும்பொழுது உன் நுண்ணறிவு உடல் யாவையும் உன் உள்ளே இருக்கும் பேருண்மையான ஆத்மாவிடம் சமர்ப்பித்து விடு. யாதும் ஆத்மாவிடம் உருகட்டும். – ஆத்மாவே உண்டு. உன் உணர்வுகளில் எல்லாம் ஓங்காரம் ஒலிக்கட்டும். ஓங்கார உணர்வு கொள். உன் செயல்கள் எல்லாம் அதுவாகட்டும். – உடலில் உள்ள ஒவ்வொரு அணுவினுள்ளும் அந்த உணர்வு பரவட்டும். எலும்புகள் நரம்புகள் ஊடே அது பாயட்டும். நாடிகளினுள் ஓடட்டும். ஒவ்வொரு உரோமத்திலும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலும் ஓம்! ஓம்! ஓம்! என்ற உணர்வு ஒலிக்கட்டும். ஓங்கார உணர்வு எங்கும்

உன்னுள்ளும் வெளியிலும் பாயட்டும். நீ காண்பதெல்லாம் ஒரே உண்மை. அதுவே பேருண்மை. அதுவே ஓம்! ஓம்! ஓம்!.

ஓங்கார உணர்வு பெற்றதும் சர்வ சக்தியும் பெறுகிறாய். பிரணவத்திடம் இருக்கும் வல்லமையை நீ பெறுகிறாய். பிறகு நீ ஒளிகளுக்கெல்லாம் ஒளி!. ஞாயிறுகளுக்கெல்லாம் ஞாயிறு!. பிரபஞ்சத்தை ஆளுகின்றவன் நீ. பிரபுகளுக்கெல்லாம் பிரபு. அதுவே உன்னுள்ளே இருக்கும் பேரருள். – பேருண்மை - ஓம்! ஓம்! ஓம்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ காணுகின்ற சூரியனும், சந்திரனும் உன் கையால் ஆக்கப்பட்டவை. நில உலகமும் மோச உலகமும் உன்னால் படைக்கப்பட்டவையே. இப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும் உன் புகழை பறை சாற்றும். எல்லாம் உன்னை வழிபடும். ஓம்! ஓம்! ஓம்!.

எஸ்.கௌரி
எம்,ரிஎ.02.08

உசாத்துணை நூல்- ஆத்மசோதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி மகிமையும் நவராத்திரி அலங்காரமும்

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தியாக மலைமகள், அலைமகள், கலைமகள் என மூவராய் பராசக்தி அருள்புரியும் ஒன்பது நாட்களே நவராத்திரியாகும். சிவனுக்கு ஒரு இராத்திரி தான் விசேஷபூசை ஆனால் அம்பிகைக்கோ ஒன்பது நாட்கள் விசேஷ பூஜை. பெண்மைக்கு இந்துதேசம் என்றுமே மதிப்பளித்து வந்துள்ளது என்பதை இதிலிருந்து அறியலாம். வீடுகளில் கொலுவைத்து குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தி கொலு பொம்மைகளின் தன்மையை விளக்கிக் காட்டுவதன் மூலம் வாழ்க்கையின் இரகசியம் உணர்த்தப்படுகிறது.

மனிதர்களாகிய நாம் எவ்வாறு வெவ்வேறான இடங்களுக்கு வெவ்வேறு வடிவான ஆடைகளை உடுத்துக்கொள்கின்றோமோ அதே போலவே இறைவனையும் நாம் சிறப்பாக அலங்கரித்துப் பார்க்கின்றோம். தாய்த்தெய்வமாகிய சக்தியை பல்வேறு அலங்காரத்தினூடாக நாம் நவராத்திரி காலத்திலே வழிபடுதல் வேண்டும்.

முதல் நாள் ஷைலபுத்ரீ என்ற பெயரில் அம்பிகையை வணங்குவர். இமயமலையின் அரசன் இமவான். இவனுக்கு மகளாகப் பிறந்தவள் பார்வதி. ஷைலம் என்றால் மலையெனப் பொருள்படும். எனவே பார்வதி மலைமகளென போற்றப்படுவதற்கான காரணம் இதிலிருந்து புலப்படுகிறது. இன்றையநாள் தேவியை காளை வாகனத்தில் அமர்த்தி கையில் சூலமேந்திய வகையில் வாழ்வு தருவார். இத்தினத்தில் இவ்வடிவில் இவளை வணங்கினால் மங்களம் பெருகும்.

இரண்டாம் நாள் அன்னை பார்வதி சிவபெருமானை அடையத் தவஞ்செய்யும் நிலையில் வெள்ளையாடை அணிந்து பிரம்ம சாரிணியாக அலங்கரிப்பார்கள்.

மூன்றாம் நாள் சித்கர காண்டா வடிவத்தில் அம்பிகையை அலங்கரிக்க வேண்டும். இத்தேவியைப் பத்துக் கரங்களுடன் புலிமீது அமர்ந்திருக்கும் நிலையில் வடிவமைக்க வேண்டும். அன்று சிவப்பு ஆடை உடுத்துவர். இவளை வணங்கினால் துஷ்ட சக்திகள் விலகும். தீவிரவாதம் கட்டுப்படும் என்பது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் நாளில் பார்வதிதேவி எட்டுக் கரங்களுடன் சிறுத்தை மீது அமர்ந்த கோலமே கூஷ்மாண்டா வடிவமாகும். இவளைப் பூஜிப்பதால் செல்வவளம் கிடைக்கும்.

ஐந்தாம் நாள்

அம்பிகையியை முருகனை ஆறுமுக வடிவில் அலங்கரித்து மடியில் அமரச் செய்ய வேண்டும். கந்தனுடன் காட்சி தருவதால் ‘ஸ்கந்த மாதா’ எனப்படுவாள். நான்கு கரம் கொண்டவள் இவளை வழிபடுவதால் குழந்தை வரம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

ஆறாம் நாள்

தேவியை சிங்கவாகனத்தில் அமர்த்தி துர்க்காதேவி கோலத்தில் அலங்காரம் செய்ய வேண்டும். நான்கு கைகளுடன் கால்மீது கால் போட்டு அமர்ந்த நிலையில் வடிவமைக்க வேண்டும். இவளை வழிபட்டால் எதிரிகள் பயமில்லை.

ஏழாம் நாளில்

அம்பிகையை மிகவும் மாறுபட்ட நிலையில் உக்கிரமான முகத்துடன் ரௌத்திரியாக ஸ்தாபனம் செய்ய வேண்டும். நான்கு கைகளுடன், கழுதை வாகனத்தில் அமர்த்தி, ஒதுக்குப்புறமாக நின்று பூஜை செய்ய வேண்டும். இவளை வணங்கினால் துன்பங்கள் பஸ்பமாகி நன்மையை மட்டுமே அடையும் நிலையும் ஏற்படும்.

எட்டாம் நாள்

அம்பிகையை மகாகவுரியாக கருதி வழிபட வேண்டும். அன்னபூரணியின் வடிவத்தில் அலங்காரம் செய்து ரிஷப வாகனத்தில் அமர்த்தி பூஜிக்க வேண்டும். இவளை வணங்குவதால் பசிப்பிணி நீங்கும்.

ஒன்பதாம் நாளில்

தாமரை மலர் மீது அம்பிகையை அமர்த்தி நான்கு கரங்களுடன் சாந்தசொரூபத்துடன் ஹரியும் சிவனும் போற்றும் ஆதிபராசக்தியாக வழிபடுகிறார்கள். இவளை வணங்கினால் சொர்க்கம் கிட்டும்.

அம்பிகையை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அவதாரமாக அலங்காரம் செய்து வழிபடுவது நவராத்திரியின் வழக்கமாகும். கன்னிபூஜை இன்று பெரும்பாலும் நின்றுவிட்டது. இப்பூஜையின் கடினத்தன்மையும் இதனை எவ்வாறு செய்பவது என்று தெரியாததும் இதற்குரிய காரணமாகும். கன்னி பூஜைக்கு பட்டுப்பிதாம்பரம் எல்லாம் தேவையில்லை. வயதுக்கு வராத பெண் குழந்தைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு ஓரளவாவது பக்திக் கீர்த்தனைகள், ஸ்லோகங்கள் தெரிந்திருக்க வேண்டும். பத்து வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளைத் தெரிந்தெடுப்பது இதற்கு நல்லது. பன்னிரண்டு, பதின்மூன்று வயதுக் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்தால் அவர்கள் பூஜாகாலத்தின் போதே வயதுக்கு வந்துவிட வாய்ப்புண்டு. எனவே இதைத் தவிர்க்க வேண்டும்.

அந்தக் குழந்தைகளுக்கு புத்தாடை அணிவிக்க வேண்டும். ஒரு பாவாடை, சட்டை, தாவணி அணிந்து முடிந்த அளவு அலங்கரித்து அவளை ஒரு மரப்பலகையில் அமர்த்தி அம்பிகையாக பாவித்து பூஜை செய்ய வேண்டும். அம்மன் முன் படைத்த நைவேத்தியத்தில் சிறிதளவை அவளுக்கு ஊட்டி கற்பூர ஆரத்தி காட்ட வேண்டும். வயதில் மூத்த சுமங்லிகள் இந்தப் பூஜையை நடத்த வேண்டும். அக்காலத்தில் இப்படி செய்ததன் மூலம் குடும்பம் தழைக்கவும் மழை பெய்து ஊர் தழைக்கவும் காரணமாக இருந்ததாகச் சொல்வர். அந்தணர்களைக் கொண்டும் இந்தப் பூஜையைச் செய்யலாம். வசதி அதிகமுள்ளவர்கள் ஏழைகளுக்கு ஒன்பது நாட்களும் அன்னதானம் ஆடைதானம் செய்யலாம்.

நவராத்திரி முடிந்து பத்தாம் நாளான விஜயதசமி அன்று அம்பிகை நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் நாள் என்பதால் அவளுக்கு சீதனம் கொடுக்க வேண்டும். மலரால் அலங்கரித்து கைகளில் வளையல் பூட்டி இரண்டு கரங்களுடன் அலங்கரிக்க வேண்டும். இனிப்புப் பண்டம், நைவேத்தியம் செய்து பிரசாதமாக கொடுக்க வேண்டும். இந்த பத்து சிலைகளையும் விஜயதசமிக்கு மறுநாள் நீர் நிலைகளில் கரைக்க வேண்டும்.

இவ்வாறாக இந்து சமயத்தவர்களால் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவின் மகிமையினையும் அலங்கார முறையினையும் அறிந்து கொள்ளலாம்.

சி.கலைச்செல்வன்
ஆரம்பக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் காணப்படும் அறிவியல் சிந்தனைகள் ஓர் நோக்கு

இறைவன் மீது நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் முகமாக பாடப்பட்ட பாடல்களாக திருமுறைகள் விளங்குகின்றன. திருமுறைகளில் திருவாசகமும் அடங்கப்பெறுகின்றது. முணிவாசகரால் பாடப்பட்ட திருவாசகம் இறைவனை போற்றி பரவுவதை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளாது பல உயரிய சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டுவிளங்குகின்றது. விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட இன்றைய அறிவியல் உலகம் ஏற்றுக்கொள்ளுகின்ற பல அறிவியல் சிந்தனைகளை திருவாசகம் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

இன்றைய விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்கின்ற உலகம் பற்றிய சிந்தனைகளை உணர்ந்து கூறியவராக மணிவாசகர் திகழ்கிறார். திருவண்டப்பகுதியில்,

" அண்டப் பகுதியில் உண்டை பிறக்கும் அளப்பருந்
தன்மை வளப்ப பெருங்காட்சி ஒன்றுக் கொன்று
நின்றொழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட
விரிந்தன இல் நுழைகதிரின் துன் அணுபுரையச்
சிறியவாகப் பெரியோன்".

என்ற பாடல் அண்டமாகிய பெரும் பகுதியில் 100 கோடியின் மேலாக உண்டைகள் பெருக்கமுற்று விரிந்தன என்று கூறுகிறார். ஐன்ஸ்ரீன் என்ற விஞ்ஞானியின் கணக்கின் படி இவ் அண்டத்தின் அரைவட்டம் 35 கோடி ஒளி வருடங்கள் ஒரு வினாடிக்கு 186000 மைல்கள் வேகம் செல்லக் கூடிய சூரிய ஒளியானது அண்டத்தின் ஓரிடத்தில் புறப்பட்டு அதனைச் சுற்றிக் கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்திற்கு வர 20 கோடி மானிட வருடங்கள் ஆகும். மணிவாசகப் பெருமான் கூறிய படி அண்டப் பகுதியில் உள்ள உண்டைகளின் பெருக்கம் 100 கோடிக்கு மேற்பட்டன என்பது மட்டுமன்றி அவை எண்ணிமாளாதவை என்ற கருத்தையே வலியுறுத்துகின்றார். ஐன்ஸ்ரீன் என்ற விஞ்ஞானி கூறுகையில் அண்டம் விரந்து கொண்டே செல்கிறது என்கிறார். இதுபோல் திருவாசகத்திலும் அணு நுண்மையானது என்றும் அணுக்கள் பற்றிய சிந்தனைகளும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ அவனின்றி ஓரணுவும் அசையாது
அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க”

“வண்ணத்தான் சேயதன்று வெளிதேயன்ற
நேகன் ரகன் அணுவணுவில் இறந்தாயென்றங்”

என்ற பாடல் அடிகளில் அணுக்கள் பற்றிய சிந்தனையை

அடுத்து இந்த உடலும் உலகமும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களினால் ஆனது.

“அண்டத்தில்லுள்ளே பிண்டம்
பிண்டத்தில் உள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்து தான் பாக்கும் போதே”

என்று திருமூலர் கூறுகின்றார். இக் கருத்தினை ஏற்றுக்கொண்ட மணிவாசகர் திருச்சதப் பகுதியில்

“ வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி
ஊயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யுானெனதென்றவரைக் கூத்தாட்டு வானாகி
நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே”.

நில நீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன் புலனாயமைந்தனோ எண்வகையாய் புணர்ந்து நின்றான். என்றும் இறைவன் ஐம்பூத வடிவாய் நிற்பதை போற்றுவதையும் காணலாம். ஐம்பூதங்களின் இயல்பு திருவண்டப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

“அருக்கணியிற் சோதியமைத்தோன் திருத்தகு
மதியில் தன்மை வைத்தோன் திண்திறல்
தீயில் வெண்மை செய்தோன்”

என்ற பாடல் சூரியனில் ஒளியினை அமைத்தவன் சந்திரனில் குளிர்ச்சியை வைத்தவன் நெருப்பினிலே வெப்பத்தை வைத்தவன் காற்றிலே குளிர்ச்சியை வைத்தவன் என்று கூறுவதைக் காணலாம்.

1/538.S.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி"

என்ற அடிகளிலும்

"ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய் ஏனைய
பிறப்பாய் பிறந்திருந்தெய்ந்தோனை"

என்ற பாடல் அடிகளிலும் பிறப்பின் பல்வேறு பரிமாணங்கள் கூறப்படுகின்றது. இக் கருத்துக்கள் டார்வினின் பரிணாமக் கொள்கையை ஒத்திருக்கின்றன என்று ஆராய்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

"நடப்பனநடா அய் கிடப்பன கிடா அய் நிற்பன நிறுவிச்
சொற்பதங் கடந்த மேலோன்."

என்ற பாடலில் இறைவன் பார்வை இல்லை என்றால் நடப்பனவும் கிடப்பனவும் நிற்பனவும் எவ்வித இயக்கமும் இன்றி அவ்வப்படியே இருக்கும் என்று குறிப்பிடுகின்றார். இதனையே தூண்டல் துலங்கல் விதி குறிப்பிடுகின்றது. வேற்று விசையால் தூண்டப்படாத வரையில் நிற்கின்ற பொருள் நின்று கொண்டே இருக்கும் என்ற நியுட்டனின் விதி மாணிக்கவாசகரின் சிந்தனையோடு ஒத்திருப்பதைக் காணலாம்.

அடுத்து

"பாதாளம் ஏழினுங் கீழ். சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருன் முடிவே"

என்ற திருவெம்பாவைப் பாடலில் இறைவனுடைய திருவடி மலர்கள் அதலம், விதலம், வதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாலம் எனும் கீழ் உலகங்கள் ஏழினுக்கும் கீழே சென்று இவ் அளவின என்று கூறுவதனுடாக நிலத்திற்கு கீழே இருக்கும் உலகம் பற்றி கூறப்படுவதைக் காணலாம். இதனைக் கருத்திற்கொண்டுதான் இன்று நிலத்திற்கு கிழே ஆராய்ச்சி நடப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றித் திருவகளில்

“மானிடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனம் இல்
கிருமிச் செருவினிற் பிழைத்தும் ஒரு மதி
தான்றியின்
இருமையின் பிழைத்தும்”

“எட்டாம் திங்களில் கட்டமும் பிழைத்தும் என்பதில் வரு துன்பமும்
பிழைத்தும் தக்க தாமதி தாயொரு தான் படுந் துக்க சாகரத்
துயரிடைய பிழைத்தும்:”

என்ற பாடலில் கரு உருவாகுவதில் இருந்து ஒவ்வொரு மாதத்திலும் ஏற்படும் நோய்களில் இருந்து தப்பித்து குழந்தை பிறப்பது பற்றி கூறுவதில் இருந்து திருவாசகத்தில் மருத்துவக் கருத்துக்களும் இடம்பெற்று இருப்பதைக் காணலாம்.

எனவே மேற்கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்கும்போது திருவாசகம் பத்தி மேலீட்டினால் பாடப்பட்ட போதும் அணு பற்றிய சிந்தனை, உலகம் பற்றிய சிந்தனை, பஞ்ச பூதம், மருத்துவ சிந்தனை ஆகியன பற்றிய விடயங்கள் கூறப்படுவதில் இருந்து திருவாசகத்தின் பெருமையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

“பணிவு பலவீனம் அல்ல. அதுவே பலம் அதுவே சக்தி”

-சுவாமி சிவானந்தா-

பு.சுகந்தா
ஆரம்பக்கல்வி
2ஆம் வருடம்

உசாத்துணை நூல்
நாயன்மார் வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளையாரை மட்டும் சாலை ஓரத்திலும், மரத்தடியிலும் வைத்துக் கும்பிடுகின்றோமே அது சரியா? தலையில் குட்டிக் கொண்டு வணங்குவது ஏன்?**

பிள்ளையார் ஏழை எளியவர்களுக்கெல்லாம் அருள் செய்யும் எளிய சுவாமி. மஞ்சள் பொடியிலும் களிமண்ணிலும் சாணியிலும் கூட எவரும் பிள்ளையாரைப் பிடித்து வழிபட சாஸ்திரம் அனுமதிக்கின்றது. அவரை வழிபட நாம் நிறைய சாஸ்திரம் படிக்க வேண்டும் என்பதில்லை. ஒன்றும் படிக்காதவனுக்கும் கூட அவர் கூப்பிட்ட குரலுக்கு வந்துவிடுவார்.

மற்ற சுவாமிகளைத் தரிசனம் செய்வது என்றால் நாம் அதற்காக ஒரு காலம் பார்த்து நேரம் பார்த்து குளித்து முழுகி அர்ச்சனை சாமான்கள் வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போகவேண்டியிருக்கிறது. போனாலும் நேரே அந்தச் சுவாமியிடம் போய்விட முடியாது. பிரகாரத்ததைச் சுற்றிக்கொண்டு போக வேண்டும். அப்போதும் கூட சுவாமிக்கு மிகவும் பக்கத்தில் போய்விடக் கூடாது. கொஞ்சம் தள்ளித்தான் நிற்க வேண்டும். பிள்ளையார் அப்படியில்லை. சாலையோரத்திலும் மரத்தடியிலும் கூட அவர் அமர்ந்து கொண்டிருக்கிறார். கிட்டே போய்க் கும்பிடலாம். வேலைக்கோ கடைக்கோ பள்ளிக்கூடத்துக்கோ போகிற வழியிலும் கூட அவரைத் தலைநிமிர்ந்து பார்த்து வணங்கலாம். அதிலேயே நமக்குச்சொல்லத் தெரியாத ஒரு சந்தோஷம் உண்டாகிவிடும். அவர் எளிய குழந்தை வடிவமான சுவாமி. பிள்ளையார் வழிபாட்டுக்கென்றே சில அம்சங்கள் இருக்கின்றன. சிதறு தேங்காய் போடுவது நெற்றியில் குட்டிக்கொள்வது இரண்டு கைகளையும் மறித்து காதுகளை பிடித்துக் கொண்டு முட்டிக்கால் தரையில படுகிற மாதிரி தோப்புக்கரணம் போடுவது ஆகியவை அவற்றிலுள்ளன.

யோக சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நாம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால் எப்படி மனதையும் நல்லாக மாற்றிக் கொள்ளலாம் என்று வழி சொல்லியிருக்கிறது. நம்முடைய உடம்பை பல தினுசுகளாக வளைத்துச் செய்கின்ற அப்பியாசங்களினால் சுவாசத்தின் கதியில் உண்டாகிக் கொள்கின்ற மாறுதல்களால் நம்முடைய உள்ளம் உயருவதற்கான வழி அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வது தோப்புக்கரணம் போடுவது இவற்றால் நம்முடைய நாடிகளின் சலனம் மாறும். மனத்தில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையுடன் செய்தால் அதற்கு நிச்சயமாகப் பலன் தெரியும்.

எஸ். சந்திரமதி
விஞ்ஞானம்
முதலாம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகமும் அறிவியலும்

இமயம் முதல் குமரி வரையுள்ள பரந்த நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களின் வழிபாட்டு முறைகள் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், சடங்குகள் ஆகிய அனைத்தும் ஒட்டு மொத்தமாக இந்துப் பழக்கவழக்கமாக கலாச்சாரமாக ஏற்கப்பட்டன. ஆகவே இந்து மதம் என்பது ஏனைய மதங்களைப்போல் எந்த ஒருவராலும் தோற்றுவிக்கப்படவில்லை என்பதும் அதனாலேயே இந்துமத சிந்தனையில் பல்வேறு கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவாகின்றது. இந்து மதம் பல்வேறு சிந்தனைகளின் தொகுப்பாக இருப்பதால் பல்துறை அறிவியல் சிந்தனைகள் கூட இந்துமத சிந்தனையின் ஓர் அங்கமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. வானியல், புவியியல், மருத்துவவியல், உயிரியல், தாவரவியல் போன்ற அனைத்து துறைகளும் ஞானிகளால் தெளிவுபடுத்தப்பட்ட போதும் அவையும் இந்துமத பிரிவுகள் போலாகிவிட்டன. அதன் காரணமாக பழங்காலெ இந்தியரின் சிந்தனை ஒட்டு மொத்த இந்துக்களின் சிந்தனை என்றாயிற்று. இந்த வகையில் ஞானிகள் கண்டறிந்து கூறியுள்ள பல விஞ்ஞான உண்மைகள் இன்றைய பல புதிய கண்டுபிடிப்பிற்கு வலிமை சேர்ப்பதாக உள்ளன.

பண்டைக்காலத்தில் இயற்கையை ஆராயத்தொடங்கிய மனிதனுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. ஒன்றாய் இருந்த விதை பின் வேராய் அடிமரமாய் கிளையாய் கொப்பாய் இலையாய் பூவாய் காயாய் என்று பல வகையாய் மாறுவது போலவே வித்தென அருவமாய் இருந்தவை மரமாய் மரமென உருமாறியது என அவன் நினைத்தான். இக் கொள்கையே பரிணாமவாதம் என்றனர். இந்த உலகம் இதனை ஒத்த போலவே அண்டங்களும் அணுவினால் ஆனவையே. பூக்கள் சேர்ந்து பூ மாலையாதல் போல அணுக்கள் சேர்ந்து அண்டமாகியது. அசித்து என்ற வைணவ தத்துவம் அணு அண்டமாதலை விளக்குகின்றது. அசித்து என்பது அறிவிலாத பொருள். இது இறைவனுக்கு உடலாக (சரீர-சரீர பாவனை) இருப்பது பற்றி நம்வாழ்வருடைய- திருமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திட விசும்பு ஏரிவளி
நீர் நிலம் இவைமிசை
படர் பொருள் முழுவதுமாய்
அவையவை தொறும்
உடன் மிசை டெயிரென
கரந்தெங்கும் பரந்துள்ளான்' - எனக்

உலகத் தோற்றத்திற்கு ஈஸ்வரனே முதற் காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் எனும் மூவகை காரணங்களாக உள்ளான். எனும் இவ் வைணவ தத்துவத்தின் மூலம் அண்டமுண்டாதல் விளக்குகின்றது. அதாவது அசித்து ஆக்குமமாக இருக்கும் நிலையில் அதாவது உலக உற்பத்திக்கு முன்னர் அதனுள் இறைவன் அந்தர்மியாக சங்கமித்துள்ள நிலை- முதற்காரணம். அசித்தை வெளிப்படுத்தி உலக படைப்பினை நிகழ்த்தும் நிலை- நிமித்த காரணம். இங்கு இறைவனுடைய ஞானம், சக்தி முதலியவையே துணைக்காரணம் என்பர் தத்துவ ஞானிகள்.

அணுவின் அமைப்பும் அண்டங்களின் அமைப்பும் ஒப்புடையனவாக உள்ளன என்பதனை அறிவியலாளர்கள் ஆய்வுகளால் மெய்பித்துள்ளனர். இதனையே ஞானிகளும் உணர்வால் அனுபவமாக கண்டனர். இவ்வாறு அறிவியலாளர்களின் அணுவியலும் ஞானிகளின் அனுபவவியலும் ஓரிடத்தில் இணைகின்றது.

கதிரவனே ஆற்றலின் மூலம் என்பது இன்றைய அறிவியலின் உண்மை. இவ்வுலகைச் சிவமாகக் கொண்டால் கதிரவன் சக்தியாகின்றது. இவ்வாறே அணுவின் உட்கருவும் சக்தியாகின்றது. ஒருவருடைய உயிர்ப்பு ஆற்றல் அவருடைய தடைப்படாத இதயத்துடிப்பில் இருப்பது போல இவ்வுலகின் ஆற்றல் கதிரவனிலும் அணுவின் ஆற்றல் அதன் உட்கருவிலும் அடங்கியுள்ளன. இதனை சிவனது நடராஜர் திருவுருவம்

நடராஜத் திருவுருவத்தின் திருவாசி- ஓம் எனும் பிரணவம் ஆகம். இவரது சடை ஞானமே வடிவானது. இதன் விரிந்த நிலை ஞானத்தை அள்ளி வழங்குவதனைக் குறிக்கும். வீசிய கரத்தால் மாயையை உதறி ஊன்றிய பாதத்தால் மலத்தினை அமுக்கி தூக்கிய திருவடியாக அருளை எடுத்து ஆன்மாக்களை ஆனந்தக்கடலினுள் அமிழ்த்துவார் ஒரு கையில் உடுக்கு மறுகையில் மழு கொண்டிருப்பது உலக அமைப்பில் ஒலி,ஒளிகளின் முக்கியத்துவத்தை காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நடராஜப் பெருமானின் தத்துவமே அணுவினுள்ளும் ஆடல் அசைவுகளாக அமைந்து கிடக்கின்றது என்பதை இன்றைய அறிவியல் உணர்த்துகின்றது. இதனையே மூலர்,

எங்குந் திருமேனி எங்குந் சிவசக்தி
எங்குந் சிதம்பரமும் எங்குந் திருநட்டம்
எங்குந் சிவமாயிருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனாருடன் விளையாடாதே

என்பர்.

எங்கும் நிறைந்த அருளாற்றல் மிக்க சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் உயிர்களின் நன்மையின் பொருட்டேயாகும். இவையனைத்தும் சிவசக்தியின் வாயிலாவே அவன் செய்தருகின்றான். எல்லா உயிர்களும் உலகங்களும், உலகியற் பொருட்களும் அவனை சார்ந்தே நிற்கின்றன. இதனை திருமூலர் "அம்பலமாவது அகில சராசரம்" என்பதுடன் சிவஞான சித்தியார்,

'உலகமே உருவமாக
யோனிகள் உறுப்பதாக
இலகுபேர் இச்சா ஞானக்
கிரியையுற் காரணமாக
அகில உயிர்ப்புலன்கட்டு
அறிவினை ஆக்கி ஐந்து
நலமிகு தொழில்களோடும்
நாடகம் நடிக்கும் நாதன்'

என்பர். ஊழியின் முடிவில் இவ்வுலகம் முழுவதும் அணுத்தத்துவமாக மாறும் என்பதனையும் மீண்டும் படைப்புக் காலத்தில் அது அண்டங்களாக வடிவெடுக்கும் என்பதனையும் மெய்யுணர்வு பெற்ற தாயுமானவர்

ஏகத்தை யெல்லாம் அணுவளவும்
சிந்தா வண்ணம்
சேர்த்து அணுவில் வைப்பை - அணுத்
திரளை எல்லாம்
மகத்துவமாய் பிரமாண்ட
மாகச் செய்யும்
வல்லவா நீ நினைத்த
வாறே எல்லாம்....

என ரத்தினச் சுருக்கமாக விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் உண்மையே இன்றைய அறிவியல் அறிஞர்கள் புலன் உணர்வை பன்மடங்கு பெருக்கும் கருவிகளைக் கொண்டு விளக்கியுள்ளனர்.

மணிவாசகர் விஞ்ஞானத்தையும் மெய்ஞானத்தையும் ஒருங்கே காணுகின்றார். இதனை,

‘பூதங்கள் ஐந்தாகி
புலனாகிப் பொருளாகி
பேதங்கள் அனைத்துமாய்
பேதமிலா பெருமையினை
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொலியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்கு தில்லை கண்டேனே’ எனப் பாடுகின்றார்.

இதனையே சோக்கிழார்,

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி
அருமறை சிரத்தின் மேலாம்.....

எனக் கண்டு வழிபடுகின்றார். குழந்தை பிறந்தவுடன் அழுகின்றது. அது அழுவதால் தான் பெற்றவர்க்கு மகிழ்ச்சி. அன்னைக்கருவறையில் இருக்கும் போது அன்னையே அதற்கு வேண்டிய உயிர்க்காற்றை நல்குகின்றாள். ஆதலால் குழந்தை கருவறையில் இருந்து வெளியே வந்ததும் அது அழுவதால் தான் நுரையீரல் செயற்படத் தொடங்குகின்றது. இவ்வாறு உலக வாழ்க்கைக்கு பெருந்துணையாக இருக்கும் அழுகை ஆன்மீக வாழ்க்கைக்கும் துணை புரிவதை அருளாளர்கள் எமக்கு காட்டியுள்ளனர். திருமங்கையாழ்வார் தமது வாழ் நாட்களில் பெரும் பகுதி வீணே கழிந்தமைக்கு கழிவிரக்கம் கொண்டு புலம்பும் போது,

‘ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன் கழிந்த அந்நாட்கள்’

என்கின்றார். தன் பெரிய திருமொழியில் அதாவது ஊமை ஒருவன் கனவு கண்டால் அதனை வாய் விட்டு சொல்லி மகிழ முடியாது. ஆனால் தான் நினைத்து மகிழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு தான் மகிழக்கூடிய விடயம் ஒன்றில்லாமல் தன் நாட்கள் வீணாகக் கழிந்து விட்டதே எனச் சோக உணர்வுடன் அழுகின்றார். பொய்கையாழ்வாரும் அன்று திருக்கோவிலூரில் தான் கண்ட எம்பெருமானின் திருவடிகளைத் தொழுதவாறு கடந்த காலத்தில் இதனைக் செய்ய முடியவில்லையே எனப்பரிதவித்து,

'பழுதே பலகாலும் போயினவென்று
அஞ்சி அழுதேன்'

என ஏங்குகின்றார். இதே போல் நம்மாழ்வார் தமக்கு அறிவு மலராத காலத்தில் இராமபிரானைத் தோத்திரம் செய்யாது போனவையை நினைத்து

'தெரிந்துணர்வென் நின்வையால்
தீவினையேன் வாளா
இருத்தொழிந்தேன் கீழ் நாட்கள் எல்லாம்'

எனப் புலம்பினார். இங்கு மணிவாசகர் தன் ஏக்கம் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது,

'யானே பொய் என் நெஞ்சும்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னை பெறலாமே'

எனத்தன் திருவாசகம் - திருச்சதத்தில் பாடிப் பரவியுள்ளார்.

அடுத்து ஓம் எனும் பிரணவ மந்திரத்தை முருகன் தந்தைக்கு உபதேசித்ததாக புராணங்கள் கூறுகின்றன. இதுவே திருஷ்டியின் மூலாதார ஓசை எனப்படுகின்றது. பிரபஞ்சம் தொடர்பான ஆராய்ச்சிகள் பிரபஞ்சத் தோற்றம் நிகழ்ந்த போது "ஓம்" எனும் ஓசையே வெளிப்பட்டதாக கூறுவர். வெடித்து சிதறல் தத்துவமும் "ஓம்" ஓசை வடிவமே என்கிறார் Dr. றொபேட் வில்சன். இவ்வாறு வெளியெங்கும் பரவியுள்ளது என்பதை Dr. ஆர்னோபிஞ்சியாஸ் ஏற்கின்றார். இத்தகைய ஓம் எனும் ஓசை சக்தியின் வடிவம் என்பதும் இதனை உச்சாடனம் செய்யும் போது ஆக்கபூர்வமான அதிர்வுகள் ஏற்பட்டு வளமான சூழல் உருவாகியதாகவும் இந்துக்கள் நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து காலத்தின் தேற்றம் பற்றி குறிப்பிடுவதும் இங்கு இன்றியமையாதது. பிரபஞ்சம் தோற்றம் பெற்ற பின்னரே "காலம்" என்ற ஒன்று உருவாகியதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்து சாஸ்திரங்கள் படைப்பு ஏற்பட்டபோது தான் காலமும் தோன்றியது எனக் கூறுகின்றனர். பிரபஞ்சம் தான் காலத்தை உருவாக்கியது என விஷ்ணு புராணம் கூறுகின்றது. காலம் தோன்றுவதற்கு முன்னால் இந்த நிலை அநாதி எனக் கூறப்பட்டது. அநாதி என்பது ஆரம்பம்- முடிவு இரண்டும் இல்லாத ஒன்றாகும். ஆக இன்றைய விஞ்ஞானம் பிரபஞ்சத் தோற்றம் பற்றியும் காலம் பற்றியும் கூறியுள்ள தத்துவம் புராணங்களில் காணப்படும் படைப்பு தத்துவத்துடன் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

"அவனின்றி அணுவும் அசையாது" என்பது முன்னோர் வாக்கு. அணுவின் அசைவுக்கும் செயற்பாட்டிற்கும் இறைசக்தியே காரணமாகின்றது. சக்தியை இறைவன் என்று ஏற்றுக் கொண்டால் அணுவுக்குள் இறைவன் இருப்பதாக கருதலாம். அனைத்துப் பொருட்களும் அணுக்களின் சேர்க்கையால் ஆனது என்பதால் எல்லா பொருள்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பதற்கு நியாயம் கிடைக்கின்றது. அணு என்பது எலக்ரன், புரோட்டன் எனும் இரு மின்னணுத்துகள்களை உள்ளடக்கிய அமைப்பாகும். இங்கு புரோட்டனை பொண்ணாகவும், எலக்ரனை ஆணாகவும் உவமித்து பார்த்ததால் இரண்டின் சேர்க்கையுமே முழுமையான வடிவம் என்பது தெளிவாகும். இதனையே எம்முன்னோர் அர்த்தநாரீஸ்வரர் என்ற உருவமாக குறிப்பிட்டர். அவர்கள் விஞ்ஞானம் கூறும் பேருண்மைகளை தெய்வீக விடயங்களாகவே உருவகித்துக் காட்டியுள்ளனர்.

இவ்வாறாக ஆன்மீகமும் அறிவியலும் ஒரு தளத்தில் ஓரிடத்தில் சந்திப்பதை நாம் அறியமுடிகின்றது. மேலும் அறிவியல் காணாத காண முயலுகின்ற ஆன்மீகவியலின் முடிவையும் காணமுடிகின்றது. தர்மபூதஞானம். இதுவே அவன் அருளால் அவன் தாளை வணங்கவும் வழி காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

## ஓர் சிறிய கண்ணோட்டம்

பெறுதற்கரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் நம்மைச் சூழ்ந்துள்ள பந்தத்தில் இருநநது விடுபடுவதற்கு உறுதுணையாய் நின்று நம்மை இயக்கவல்ல பரம்பொருளுடன் நெருங்கியிருக்கும் இடமே ஆலயம். அத்தோடு பல்பேறுபட்ட சூழல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் எமக்கு எனமெனும் குரங்கை இயல்பாகக் ஓரிடத்தில் நிற்கவைத்தல் என்பது முடியாத காரியம். தொங்கிப்பாயும் மனதைக் கட்டுப்படுத்தி இப்பிறவியின் பயனை பெறத்தக்கதாய் மனமொன்றித்து வழிபடும் இடமாகவும் ஆலயம் விளங்குகின்றது. ஆ- ஆன்மா, லயம்- ஒடுங்குதல் (இலயித்தல்) ஆன்மாவானது மனம், வாக்கு, காயம் என்பவை ஒன்றித்து நிற்க இறைவனைப் பூசித்தல் எனப் பொருள் தரும்.

"நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலுமாம்
பிரானுடைய கோயில்புக்கு"

என அப்பர் பெருமான் செப்புகின்றார்.

நமது மனம் பலகாரியங்களையும் நினைப்பதனால் மனமானது ஓரிடத்தில் நிற்காது அலைபாயும். அதனால் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோயிலை நாடிச் செல் மனமே எனவும் அங்குதான் இந்த மனத்தினை கட்டுப்படுத்தி இறைவன் பால் முடியும் என்பது அப்பர் பெருமானின் அசையாத நம்பிக்கை. கோயில்-கோ-இல் அதாவது இறைவனுடைய வீ்டு எனப்பொருள். அடுத்தவர் வீட்டிற்கு நாம்செல்லும் போது வெறுங்கையுடன் நாம் செல்வதில்லை. அத்தோடு ஒழுக்கம் கெட்டு அங்கு நடந்து கொள்ளவும் முடியாது.

அது போன்று

கோயிலுக்கு செல்லும் போதும் வெறுங்கையுடன் செல்லாது பழம்,பாக்கு, தேங்காய்,கற்பூரம் போன்ற பூசைக்கு தேவையான பொருட்களுடன் ஆசார சீலர்களாகச் செல்ல வேண்டும். அந்த வகையில் ஆலய அமைப்பு பற்றி அனுபூதிமான்கள் கூறிவைத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் பெரியோர்கள் கூறிய குறிப்புக்களைக் கொண்டு சிலவற்றைக் காணலாம்.

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலர் மனம் என்கொல்புகாததே"

என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகள் தனது தேவாரத்தில் கோவில் வெறுங்கட்டிடமன்று. அது தத்துவ அமைப்பு. அவ்வமைப்பின் நுட்பம் தெரியாது கும்பிட்டால் அது கல்லாக, மண்ணாக வேடிக்கையாகவே தோன்றும். ஒரு யோகி காலை நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் முறையாக அமைந்துள்ளது கோவில். கோவில் யோகியின் காலைப்போன்றது. முன் கோபுரம் மூலாதாரத்தை ஒத்தது. கொடிக்கம்பம் தொப்புளை நிகர்த்தது. பலிபீடம் சிரசு போன்றது. கர்ப்பக்கிரகம் சிரசின் மத்தியை ஒத்தது. மூவஸ்தானத்தில் உள்ள தாமரைப்பூக்கண்ணாடியும் விளக்கும் தீப ஒளி இறைவனின் அருவுருவத்தை நினைவூட்டும். புறக் கோவிலில் அமைப்பு உடற்கோயிலின் பரிணாமம் என்பதற்கு திருநாவுக்கரசரின்
"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக"
என்ற தேவாரமும்
"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" என்ற திருமூலர் திருமந்திரமும் சான்றாகும்.

அந்த வகையில் கோவில்களின் கோபுரம் கடவுளது விராடசொரூபம், ஸ்தூபி- இறைவனது ஸ்தூலரூபம், உள்ளிருக்கும் திருமேனி - சூக்கும லிங்கம், கோவில்களில் உள்ள முக்கிய மண்டபங்கள் கர்ப்பக்கிரக மண்டபம, அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்ருபனமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபம் எனும் ஆறாகும். அங்குள்ள கதவுகள் கோபம், ஆசை, அவா, அலங்காரம் என்பவைக்கு காரணமான அவித்தையை உணர்த்துகின்றன. திரைச்சீலை மாயையைக் குறிக்கும். மூலமூர்த்தி நந்தி, பலிபீடம் முறையே பதி,பசு,பாசத்தை குறிப்பவையாகும். கொடிக்கம்பம் மூவஸ்தான விம்பத்திற்கு நேராக நிறுத்தப்பட்டிருக்கும். கம்பத்தை போல சரீரம் நேராக இருந்து அசையாது தியானிக்கையில் பரமானந்த சொரூபியாகிய பரமசிவன் தரிசனமாகும் என்பதைக் இக்கொடிக்கம்பம் வெளிப்படுத்தி நிற்கின்றது. கொடி மரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உட்பிரகாரத்தில் விழுந்து வணங்குதல் கூடாது. கும்பிடும் போது விநாயகரை ஒருமுறையும் சிவமூர்த்தியை மூன்று முறையும் அம்பிகைக்கு நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும். கோயிலில் ஒருமைப்பட்ட மனத்துடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதல், பிற தீமைகள் செய்தல் கூடாது. அர்ச்சகர் தரும் விபூதி பிரசாதங்களை பயபக்தியுடன் இருகரங்களாலும் ஏந்திப்பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தினை கீழே சிந்துதல், ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். வழிபாடு முடிந்தபின் கொடிமரத்தின் அருகிலிருந்து வடதிசை நோக்கி மூலமந்திரங்களை ஜெபிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு இனிமையான தோத்திரப் பாடல்களை அதிகம் சத்தம் போடாமல் பாடி துதிக்க வேண்டும். அந்த வகையிலே ஆலயங்களில் மூன்று வகையான ஓசைகள் ஒலிக்க வேண்டும். 1. மணிஓசை 2. மந்திரஓசை 3. பஜனைஓசை என அமெரிக்கத் துறவியான வெள்ளைக்காரச்சுவாமி ஸ்ரீமத் தத்திரதேவா மகராஜ் அவர்கள் "ஞானகோஷம்" எனும் நூலில் விளக்கியுள்ளார். மனிதர்களாகிய நாங்கள் பூசை பிரார்த்தனையுடன் மட்டுமல்லாது அறப்பணிகளிலும் ஈடுபடுதல் வேண்டும். எங்களிடத்தில் மருவிக் கொண்டு செல்லும் இப்பணியினை வளர்க்க அறநெறிப்பாடசாலைகள் மூலம் ஆலய வழிபாட்டு முறை தேவார திருமுறைகளைப் பண்ணேடு இசைத்தல் பஜனை இசைத்தல் போன்ற சமய பணிகளை வளர்த்து நற்பண்புகளையும் உருவாக்கவும் அப்பர் பெருமான் அருளிய "தமிழோசை பாடல் மறந்தறியேன்" என்னும் பதிகத்திற்கு ஒப்ப ஆலயத்துள்ளேயும் வெளியேயும் தேவாரப் பண்ணிசை ஒலித்துக் கொண்டிருக்கும். இதனால் மக்களிடையே பக்தி உணர்வு மேலிட்டு தீமை அகலும். இவ்வாறான கிருத்தியங்களை கருத்திற் கொண்டு ஆலய வழிபாட்டின் மூலம் இம்மானிடப் பிறவியின் பயனை பெற்று உய்வோமாக.

ந.நந்தகோபால்
சித்திரத்துறை
2ம் வருடம்

உஷாத்துணை நூல்
அருளமுதம்
கவிஞர் வேலணையூர்
பொன்னண்ணா. டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணிசை

தெய்வ இசைப்பாடல்களுள் நம் தமிழ் முன்னோர்கள் வகுத்த இசைத்திறங்களாகிய பழந்தமிழ் பண்களுக்குரிய இன்னிசை இலக்கியமாக இயன்றளவும் அநுபவத்திற் பாடப்பெற்றுவரும் தொன்மைச்சிறப்புடயவை தேவாரத் திருப்பதிகங்களேயாகும். தேவார ஆசிரியர்கள் வாழ்ந்த காலத்திலிருந்தே திருக்கோவில்களில் தேவாரம் இசைக்கும் ஓதுவார் மூர்த்திகள் நியமிக்கப்பட்டு இருந்தனர். சோழர் காலத்தில் இசைவளர்ச்சிக்குரிய இசைப்பாடல்களாகத் தேவாரங்களே நிலை பெற்று விளங்கின. சங்கீதரத்னாகர நூலில் மூவர் தேவாரப் பதிகங்களிலமைந்துள்ள “தமிழ்ப்பண்கள்” சிலவற்றைத் “தேவாரவர்த்தநீ” என்ற அடைமொழியுடன் பாஷாங்க இராகமாகத் குறிப்பிட்டதில் இருந்து தென்னாட்டு இசையின் சாகித்தியங்கள் தேவாரம் என்பதும் அது கொண்டு விளங்கிய இசை அமைப்பு “பண்ணிசை” என்பதும் தெளிவாகின்றது.

பண் என்பது முதல்,முறை,முடிவு,நிறை,திறை,கிழமை,வலிவு,மெலிவு,சமன்,வரையறை,நீர்மை, என்ற 11 பாகுபாட்டினாலும் ஆராந்தறியும் இலக்கணங்களையுடையது. பாட்டைப்பாட அமைந்த இராகமே ‘பண்’ ஆகும். இது பெருந்தானம் எட்டாலும், கிரியைகள் எட்டாலும் பண்ணப்படுவதால் பண்ணிசை எனப்பட்டது.

“பாவோ டணைதல் இசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தனம் எட்டாலும் - பாவாய்
எடுத்தல் முதலாயிரு நான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்”

என்ற பாடல் மூலம் இதையறியலாம்.

தேவார ஆசிரியர்கள் மூவரும் அருளிய திருப்பதிகங்கள் அப்பெருமக்களது திருவாயிலிருந்து வெளிவரும் போதே பண்ணார் இன்தமிழாய் வெளிப்பட்ட பாடல்களாதலின் இவற்றை “பண்சுமந்த பாடல்” என அழைப்பர்.

தெய்வத்தைப் போற்றிடும் இசைப்பாடல் “வாரம்” எனப்படுவதாய் இளங்கோவடிகள் கூறுகின்றார். இது சொல் ஒழுக்கமும், ஓசை ஒழுக்கமும் நிரம்பிய இசைப்பாடலைக் குறித்த பெயராகும். இசைத்துறையில் மிக்க நிபுணத்துவம் பெற்றவர்களாலன்றி ஏனையோராற் புணதற்கரிய நுட்பம் வாய்ந்தவை பண்ணிசைத் தேவாரங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதற் கடவுளாகிய தெய்வத்தைப் போற்றும் முறையில் மூவர் முதலிகள் இவற்றை இயலிசை நாலுந்திகழ அருளி உள்ளனர். திருஞானசம்பந்த சுவாமிகள் தாம் பாடிய திருப்பதிகங்கள் இனிய இசைப்பாடல்கள் என்பதனை "ஏழையேழநாலே மூன்றியலிசையியல்பா" எனவும் "ஏழின்னிசை மாலை", "பண்பொலி", "செந்தமிழ்மாலை" எனவும் சிறப்பித்துள்ளார். அவர் சிறப்பையுணர்ந்த சுந்தரர் சுவாமிகள் "நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" என்று அவர் புகழையும் இறையருளையும் போற்றியதையும் காணலாம். மேலும் திருநாவுக்கரசு சுவாமிகளும் "சலம்பூவொடு தூபம்தந்தறியேன் தமிழோசை பாடல் மறந்தறியேன்", "பாட்டினான் தன் பொன்னடிக் கின்னிசை" எனவும் போற்றுதலை காணலாம். இவ்வாறான திருவாய்மொழிச் சிறப்புக்களாலும் பண்ணிசையின் தெய்வச்சிறப்பை உணர முடியும்.

இவற்றில் பண் என்று நோக்குமிடத்து ஏழுஸ்வரங்களாலான இராகங்களைப் 'பண்' என்றும் ஆறு ஸ்வரங்களால் ஆன இராகங்களை 'பண்ணியல்' எனவும் ஐந்து ஸ்வரங்களாலான இராகங்களைத் 'திறம்' என்றும் நான்கு ஸ்வரங்களாலான இராகங்களை 'திறத்திறம்' என்றும் கொள்ளலாம். இதில் பண்ணியல், திறம், திறத்திறம், யாவற்றையும் பொதுப்படுத்தி "பண்" என்ற பொதுப் பெயரால் அழைக்கலாம்.

மொத்தம் நூற்று மூன்று பண்களில் தற்போது தேவாரத் திருப்பதிகங்களில் மொத்தம் இருபத்து நான்கு பண்கள் உள்ளன. அவை முறையே,

"செவ்வழி, தக்கராகம், புறநீர்மை, பஞ்சமம், நட்டபாடை, அந்தாளிக்குறிஞ்சி, பழம் பஞ்சுரம், மேகராகக்குறிஞ்சி, நட்டராகம், கொல்லிக் கௌவாணம், பழந்தராகம், குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, செந்துருத்தி, தக்யேசி, கொல்லி, இந்தளம், காந்தாரபஞ்சமம், கௌசிகம், பியந்தைக்காந்தாரம், சீகாமரம், சாதாரி, யாழ்முரி

என்பனவாகும். பண்களை வகைப்படுத்தி இசைக்கும் போது அவற்றை பகற்பண், இராப்பண், பொதுப்பண் என மூன்று வகையாக்கலாம். பொதுவாகப் பண்களில் பெருமிதம், மருட்கை, உவகை, சமநிலை, அச்சம், அவலம், இளிவரல் முதலிய சுவைகள் காணப்படுகின்றன.

மேகராகக்குறிஞ்சி, காந்தாரம், கொல்லி, கௌசிகம், நட்டபாடை, சீகாமரம், தக்கேசி, தக்கராகம், காந்தாரபஞ்சமம், ஆகியன நவசந்திப்பண்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம, சம, அர்த்தவரண பிருங்கிணி, மல்ல, நவ, பலி, கோட்டாய, மூஷிக தாளங்கள் நவசந்திதாளங்களாகும்.

இவ்வகையிலே பண்களது முக்கியமானதாகவும் சிறப்பிடம் வாய்ந்ததாகவும் திகழ்கின்றது. மேலும் பண்ணிசையானது இறைவனோடு சேர்ந்ததாகவும் ஆலயங்களில் எந்நேரமும் இசைக்கப்படுவதாலும் தெய்வ இசைப்பாடல்களில் தொன்மைச் சிறப்புடையனவாக விளங்கி வருகின்றன.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பிறேமினி இராஜதுரை
சங்கீதம்
1ம் வருடம்

உஷாத்துணை நூல்
வட இலங்கைச்
சங்கீதசபை
பொன்விழா மலர் - 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களை உதிர்த்த பால முருகன்

முருகனின் ஆறுபடை வீடுகளில் ஆறாவது வீடு பழமுதிர்ச்சோலை. சுற்றிலும் மலைகள், அடர்ந்த காடுகள், மூலிகை மரங்களும் செடிகளும் கொடிகளும் காணப்படுகின்ற ஆரோக்கிய தலம் இது. இங்கே நடந்த திருவிளையாடல் இதோ!

ஔவையாருக்கு நாவல் பபபழமரத்தின் மேல் நின்று காட்சியளித்து 'கற்றுணர்ந்த ஔவையே உமக்கு சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?' என்று முருகன் கேட்க ஔவையார் "பழம் எங்கேயாவது சுடுமா?" என்று எதிர்க்கேள்வி கேட்கிறார். அதற்கு பதில் சொல்லாமல் முருகன் மரத்தை உலுப்பி பழங்களை மண்ணில் விழச்செய்ய நல்ல பழத்தை வீணாக்குவதா என்ற ஔவை கீழே கிடந்த பழங்களை எடுத்து அதன் மேல் ஒட்டியிருந்த மணலை வாயால் ஊத முருகன் "என்ன ஔவையே பழம் சுடுகின்றதா" என நகைப்புடன் கேட்க ஔவையால் என்ன பதில் சொல்ல முடியும். 'முருகா முருகா' என்று கைகூப்பித் தொழுது ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். இந்த திருவிளையாடல் நடந்த இடமே பழமுதிர்ச்சோலை என்கின்றார்கள். முருகன் பழம் உதிர்த்தசோலை தான் பழமுதிர்சோலையாக மாறியது. ஔவையாரைத்தவிர அருணகிரிநாதருக்கும், நக்கீரருக்கும் முருகன் இங்கே காட்சியளித்து இருக்கின்றார். சிறிய ராஜகோபுரத்தை தாண்டி உள்ளே நுழைந்தால் அதிக உயரம் இல்லாத கொடிமரம் காட்சியளிக்கின்றது. கொடிமரத்திற்கு அருகில் நிறைய நெய்விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டு இருக்கின்றன.

கொடிமரத்தை அடுத்து பெரியகூடம் மண்டபத்தின் மேல் பகுதியில் முருகனின் திருவிளையாடல்கள் வரையப்பட்டு இருக்கின்றன. பார்வதி வேல் கொடுத்தது, வள்ளியை யானை துரத்தியது, சூரபத்மனை வதைத்தது இது போன்ற பல சித்திரங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. கர்ப்பக்கிரகம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு மூன்று வாயில்களுடன் காணப்படுகின்றன.

முதலில் காணப்படுவது கணபதி பெரிய பீடத்தின் மீது அமர்ந்த கோலத்தில் காட்சி கொடுக்கின்றார். அடுத்ததாக உள்ள நடுச்சந்நிதியில் முருகன் வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகின்றார். கல்விக்கிரகம், ஆறுபடைவீடுகளில் வள்ளி தெய்வானையுடன் ஒரே பீடத்தில் திருமுருகன் காட்சியளிப்பது இங்கு மாத்திரம் தான் என்று சொல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த சந்நிதியில் திருமுருகன் வள்ளி தெய்வானை இவர்களின் பஞ்சலோக விக்கிரகங்கள் இருக்கின்றன. அருகில் ஒரு மேடைமேல் ஒரு வேலின் உருவப்புடைப்பு சிற்பமாக காணப்படுகின்றது. இந்தக் கோவிலில் முதன்முதலில் இந்த வேல்தான் காணப்பட்டது. முருகனுக்கு முன்பே வேல் வழிபாடு வழக்கில் இருக்கின்றது. கோயில் காலப்போக்கில் வளர்ச்சியடைந்து இன்றையநிலைமையில் அடைந்ததாக கூறப்படுகின்றது. ஆறுபடை வீடுகளில் ஒன்று எனும் பெருமையை தாங்கி இருக்கும் முருகனை தரிசித்து வாழ்க்கைக்கு தேவையான எல்லாவற்றையும் பெற பக்தர்கள் எந்நேரமும் பழமுதிர் சோலைக்கு வந்த வண்ணம் இருக்கின்றார்கள். நாமும் முருகனை தியானித்து அருள் பெறுவோமாக.

## விளக்குத்திரிகளும் அதன் பயன்பாடுகளும்

01. பஞ்சுதிரி - சுகவிருத்தி, நல்லவை அனைத்தும் செய்யும்.
02. வாழைத்தண்டுத்திரி - பிதுர் சாபம், தெய்வக்குற்றம் நீங்கி சாந்தி ஏற்படும்
03. தாமரைத்தண்டுத்திரி - முன்வினைப்பாவம் போக்கும், ஐஸ்வர்யம் நிலைக்கும்.
04. வெள்ளைஎருக்கம்பட்டைதிரி - நிறைந்த செல்வம் ஏற்படும், பேய் பிடித்தவருக்கு தொல்லைகள் தீரும்.
05. புதுமஞ்சள்துணிதிரி - தேவியின் அருள் கிடைக்கும், வியாதிகள் நீங்கும்.
06. புதுசிவப்புத்துணிதிரி - திருமணத்தடை நீங்கும், மலட்டுத்தன்மை விலகும், செய்வினை தோஷங்கள் மறையும்.
07. புதுவெள்ளைத்துணிதிரி - உத்தமமான பலனைத்தரும்.

## குத்து விளக்கு

ஒரு குத்து விளக்கில் உள்ள ஐந்து முகங்களும் ஒரு குடும்ப பெண்ணிற்குரிய அன்பு, நிதானம், சமயோசிதம், சகிப்புத்தன்மை, மன உறுதி எனும் ஐந்து இலட்சணங்களை குறிக்கின்றது. இதனாலேயே குத்து விளக்குப் போல பெண்கள் இருக்க வேண்டும் எனக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவின் மகிமை

பசுவிடம் இருந்து கிடைக்கும் கோமயம், கோசலம், கோரோசனை, கோகூஷீரம், தயிர், நெய் மிகப்பரிசுத்தமானவை. கோமயத்தில் இருந்து சிவனுக்குப் பிரியமான வில்வமரம் தோன்றியது. தாமரை விதைகளும் உண்டாயிற்று. கோசலத்தில் இருந்து குக்கலு என்பது உண்டாயிற்று. நெய்யிலலருந்து அம்ருதம் உண்டானது. பாலில் இருந்து உலகமீஜம் உண்டானது.

**பசுவின் ஒவ்வொரு பகுதியிலும் இருப்பவை.**

* 2 கொம்புகளுக்கிடையில் - சதாசிவம்
* 2 கொம்புகளுக்கிடையில் - சர்வ தீர்த்தங்கள்
* 2 கொம்புகளுக்களிற்கடியில் - பிரம்மா, விஷ்ணு
* நெற்றியில் - கௌரிதேவி
* மூக்குத்தண்டில் - சண்முகன்

T. சியாமினி
DRT/03/08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் ஒரு மனநோய் நிவாரணி

இன்றைய உலகிலே பல்வேறுபட்ட தாக்கங்களுக்கு மத்தியிலே மனிதன் தனது வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றான். அவனத வாழ்விலே பல இடையூறுகள் வந்து தாக்குவதால் வாழ்க்கையை சுமையாக கருதுகின்றான். உலக மக்கள் அனைவருமே வாழ்க்கையை சுமையாக கருதுவதால் அவர்களால் மேற்கொண்டு சிறப்பான வாழ்க்கையை நடத்த முடியாமல் போகின்றது. இதனால் அவர்களது உள்ளம் பாதிக்கப்படுகின்றது. இதற்கு காரணம் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை என்று சொல்லப்படும் தியானம் என்ற தன்மையை அவர்களால் கடைப்பிடிக்க முடியாமல் போனமையேயாகும்.

மனிதனுக்கு இயல்பாகவுள்ள உள நடத்தைகளும் உணர்வு நிலைகளும் அளவுக்கு மீறிய வகையில் செயற்படுகைளில் மூச்சு, உளசெயற்பாடு அதிகமாக செயற்படுகையில் மனநிலையில் பாதித்து அதனூடாக மனநோய் ஏற்படுகின்றது. பொதுவாக மனிதனுக்கு ஏற்படுகின்ற பயம், கோபம், மறதி ஆகிய உணர்வுகள் அளவுக்கு மீறிக் காணப்பட்டால் அந்நிலையே மனநோய்க்குரிய ஆரம்ப நிலையாகும் என்று கூறுகின்றனர். தியானம் என்பது மனிதன் தன்னுடைய மனதை ஒருமுகப்படுத்தவும் தனது உணர்வுகளை ஒரு வரையறைக்குள் உட்படுத்தவும் மேற்கொள்ளும் ஒழுங்கான அப்பியாசமாகும். இத்தியானம் என்னும் அப்பியாசத்தை தினமும் காலை செயற்படுத்தல் சிறப்பானதாகும். ஜப்பான் போன்ற நாடுகளின் அபிவிருத்திக்கு காரணமாக விளங்குவது தியானம் எனும் அப்பியாச செயற்பாடே. இதனை அமெகிக்கா போன்ற நாடுகளில் இருந்து இந்தியா வந்து கற்கின்றனர். அது மட்டுமன்றி தமது நாட்டிலே பல நிறுவனங்களை ஆரம்பித்து இச்செயற்பாட்டை வளர்க்கின்றனர்.

தியானத்தினை செய்தல் மிகவும் கடினமான விடயமன்று. நாம் நமக்கு விரும்பிய கடவுளையோ அல்லது நாமத்தையோ அல்லது அவர்களின் திருவுருவத்தினையோ நமது மனக்கண்முன் நிறுத்தி ஒருமுகப்பட்டு நிற்றல் ஆகும். இத்தியானத்தினை கடைப்பிடிப்பதால் கோபம் குறைக்கவும் ஞாபசக்தி அதிகரிக்கவும் ஏனைய உயிரினங்களில் இருந்து நமது உடலியல் தேவைகளை வேறுபட்ட வகையில் பூர்த்தி செய்யவும் தியானம் உதவுகின்றது. நமது கடமைகளை சரியாகவும் பூரணமாகவும் செயற்படுத்தவும் நம்மிடம் காணப்படும் குறைகளை நீக்கி தலமைத்துவம் பெற்று வாழ்வதற்கும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தியானமானது உதவுகின்றது. இதனால் மனிதன் தன் உளநோய்க் காரணிகளை கண்டறியவும் இதன் மூலம் உளநோயை நீக்கவும் தியானம் வழிவகுப்பதால் தியானம் என்பது ஒரு மனநோய் நிவாரணி ஆகும்.

N. Ratheepa
2nt Year
Dance Counse



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை, சொல்,செயல்

ஆலயம் கட்டுதல் புனருததாரணம் செய்தல் கோடி கோடி புண்ணியம் என்பதை அருளாளர்கள் சாதனைமூலம் நிலைநாட்டினர். திருவைந்தெழுத்து தியானித்தலும் செபித்தலும் சிவாலயம் அமைத்தலும் மரணபயத்தை வெல்லவாகும். சிவவழிபாடு செய்து சிவபூசை செய்து திருவைந்தெழுத்து ஓதிய மார்கண்டேயர் புராணம் கூறுகின்றது. சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்யவெனக் கற்பனைசெய்து பொருளறகூற விவசாயி விதியை வென்றான் எனக் கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

ஒருநாள் ஏழைவிவசாயி தன்னைப்பற்றிச் சாத்திரம் அறிய விரும்பினான் இதனால் தமது சாதகக் குறிப்போலையைப் பிரசித்தி பெற்ற சாத்திரியொருவனிடம் கொண்டு போய்க் கொடுத்து தனது விதி பற்றி அதாவது வருங்கால நலன்பற்றி பார்த்துக்கூறும்படி கூறினான். நாளை விடியுமுன் இறக்கப்போகிறான். இன்று சாத்திரம் கேட்கிறானே என்று மனதுள் நினைத்து இரங்கி இன்று போய் நாளை வா என அவ்விவசாயியை அனுப்பினான்.

ஏழைவிவசாயி தமது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். இடையில் இடியுடன் பெருமழை கொட்டியது. விவசாயி பாழடைந்த சிவன் கோயிலினுள் ஒதுங்கினான். ஆலயக்கட்டடங்கள் இடிந்து காணப்பட்டன. முகாசிவலிங்கம் எண்ணெய்க் காப்புச்சாத்தி அபிடேகம் செய்யப்படாமல் இருந்ததைக்கண்ட விவசாயி பெரிதாக அழுதான். நிலத்தில் உருண்டான். பின் எழுந்தான். தன்னிடம் பெரும் செல்வம் இருந்தால் இந்த சிவாலயத்தை எவ்வாறு புனருத்தாரணம் செய்வேனெனக் கற்பனை செய்யும் போது, பேரிடி இடித்து மின்னல் மின்னி கோயிற் கட்டிட மண்டபம் உடைவது போலக் காணப்பட, அவன் மேலே அண்ணாந்து பார்த்தான். மிகவும் பெரிய கரும்பாம்பு நாக்கை நீட்டியபடி காணப்படவே அவன் வெளியே பயந்து ஓடிவரவும் உடைந்து விழவும் சரியாக இருந்தது. தப்பினேன் பிழைத்தேனென்று விவசாயி தன் இருப்பிடம் சென்றான். மீண்டும் விவசாயி மறுநாள் சாத்திரியிடம் சென்கூறு தனது சாதகம் பற்றிக் கேட்டான். சாதக ஓலையை திருப்பித்தரும்படியும் கேட்டான். சாத்திரி விவசாயியைக் கண்டதும் திடுக்கிட்டான். இதுவரை எரிந்து சாம்பலாகி இருககூக வேண்டியவன் திரும்பி வந்தான் என ஆச்சரியப்பட்டடான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. எவ்வாறோ விவசாயியின் சாதக ஓலையைக் கொண்டு வந்து அப்பா இந்த சாதக ஓலையின்படி நீ இன்று சாம்பலாகி இருக்க வேண்டும். ஏன்ன நடந்தது? எப்படிப் பிழைத்தாய்? என்று கேட்டான். விவசாயி தன் சாதக ஓலையைக் கொடுத்துவிட்டுப் போனது தொடக்கம் மழை பெயகூதது. பாழடைந்த சிவன் கோயிலில் கண்ட காட்சி, தான் கற்பனை செய்தது, இடி இடித்தது, வரை ஒப்புவித்தான். அதன் பின்னர் சாத்திரி அகத்தியர் சாத்திர வா கடதகூதை எடுத்து ஆராய்ந்த போது ஆலயங்கள் கட்டியவனும் ஆலயம் புனருத்தாரணம் செய்தவனும் செய்ய வேண்டுமென நினைத்தவன் அருகில் இயமன் நெருங்கவே மாட்டான் எனகூறு காணப்பட்டது. அதுதான் விவசாயி மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டான். ஆகையால்

சைவசமயிகள் ஒவ்வொருவரும் ஆலய புனருத்தாரணத்திற்கு தம்மால் இயன்றளவு பொருளுதவி செய்து பெரும்பயனை அடைவோமாக.

வ.விஜிதா

**உசாத்துணை நூல்கள்:**

நூலின் பெயர்: திருக்கேதீச்சரம்

நூலாசிரியர் : சைவநான்மணி சிவசமயச் செல்வ


சிவநெறிக்கலாநிதி, புலவர்,

ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் அமைப்பும் தத்துவங்களும்.



உலகெங்கும் வியாபித்திருக்கும் இறைவனை வழிபடுவதற்கேற்ற இடம் ஆலயமாகும். இதனைக் கோயில் எனவும் அழைப்பர். ஆலயம் என்பது ஆன்மாவாகிய உயிர் ஒழுக்கம் (இலயம்) பெறுவதற்குரிய இடமாகும். கருவறை அதனைச் சுற்றியுள்ள கோயிற் பகுதிகளை அமைத்துக் கொண்ட பரப்பு ஆலயமாகும். கோவில் என்பது இறைவனது இல்லம். அதாவது கோ – அரசன், இல் - இல்லம். அரசர்கெல்லாம் அரசனாக வீற்றிருக்கின்ற இறைவனது இல்லம் எனப்பொருள் படும்.

உள்ளக் கமலம் என்பது மாந்தரின் உள்ளத்தைக் குறிப்பதாகும். அன்பர்கள் அழுத்தமாக இறைவனை நினைத்தால் அவர் விரைந்து அவ்வுள்ளக் கமலத்தை நோக்கி வந்து வீற்றிருப்பார் என்ற உண்மையை வள்ளுவனார்



"மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" எனக் கூறியுள்ளார்.

திருமூலநாயனார் இறைவன் உயிருக்குயிராய் இருக்கின்ற காரணத்தாலே உயிர் குடியிருக்கும் சரீரமும் அவன் விரும்பியுறையுமிடமாகும். அத்தகைய சரீரத்தின் புறவடிவமாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஏனப்பாடல் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் கானா மணிவிளக்கே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயிலின் மறுபெயர்கள்

1) ஆலயம்
2) பிரசாதம்
3) சதனம்
4) ஷர்மியம்
5) சத்மம்
6) தாமம்
7) நிகேதனம்
8) மந்திரம்
9) பவனம்
10) வாஸம் கேஹம்
11) திவ்யவிமானம்
12) அஸ்ரயம்
13) ஆஸ்பதம்
14) ஆதாரம்
15) பிரதிஷ்ணியம்

## கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும்

வரலாற்றுக் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமக்குக் கிடைக்கப் பெறும் பழமையான கோயிலாக குடயவரைக் கோயில் காணப்படுகின்றன. இக்கோயில்கள் பல பல்லவர் ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்றன. பல்லவ மன்னன் மகேந்திரன் காலத்தில் பல குடவரைக் கோயில்கள் தோன்றின.

பல்லவர் ஆட்சிக்கு முன்னர் அழியும் பொருட்களைக் கொண்டு ஆலயங்கள் அமைத்ததனால் அவை இன்று எமக்கு கிடைக்கவில்லை. இலக்கியங்களில் அத்தகைய கோயில்கள் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. பழந்தமிழர் கோயிலை முதன் முதலில் களிமண், மரம், செங்கல் கொண்டு அமைத்தனர். அவை இயற்கையின் தாக்கங்களினாலும் பராமரிப்பின்மையினாலும் அழிந்துவிட்டன. பல்லவர் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் தமிழகத்தில் கருங்கற்களைக் கொண்டு சிலை உருவங்களும், குடவரைகளும் இருந்ததாக ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர். இராமநாதபுரம் மாவட்டம் குன்றக்குடிக்கு அருகில் குடவரைக்கோயில் உள்ளன.


பாறைக் கோயில்களை அடுத்துக் கற்றளிகள் எனப்படும் கற்கோயில்கள், மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில், பனைமலைக் கற்கோயில்களும் முதன்முதலில் கட்டப்பட்டவையாகும். பின்னாலிலே கற்கோயில்களே பெருவழக்காயிற்று. கோயில் பெருமளவிலும் வானலாவு உயர்ந்த கோபுரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட காலமாக சோழர்காலம் போற்றப்படுகின்றது. இக்காலம "பொற்காலம்" எனவும் அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர் “பெருக்காறு கடைக்கணிந்த பெருமான் சேரும்” திருஅடைவு திருத்தாண்டகத்தில் பல்வகைத் திருக்கோயில்கள் இருந்ததைச் சுட்டிப்பாட்டியுள்ளார். அவையாவன

1. மாடக்கோயில் - பல அடுக்குகளையுடைய அமைப்பு
2. கரக்கோயில் - வட்டமான விமான அமைப்புடையது
3. ஞாழற்கோயில் - குங்கும மரத்தால் அமைக்கப்பட்டது.
4. கொகுடிக்கோயில் - கொகுடி மரத்தால் அமைக்கப்பட்டது.
5. இளங்கோயில் - நான்கு பட்டமாக அல்லது திருக்கோயில் புதுப்பிக்கும் போது இறைவனை வேறு இடத்தில் புதிதாக வைத்தல்.
6. மணிக்கோயில் - ஆறுஅல்லது எட்டுப் பக்கமாக அமைக்கப்பட்டது.





01. கருவறை
02. அந்தராளம்
03. முன்மண்டபம் (அ) அர்த்தமண்டபம்
04. சாவக சந்தராளம்
05. மகா மண்டபம்
06. பலி பீடம்
07. அக்னி (அ) துர்க்கை
08. அறுபத்து மூவர்
09. சப்த மாதர்கள்
10. விநாயகர்
11. சுப்பிரமணியர்
12. ஜேஷ்டா தேவி (அ) லஷ்மி
13. சண்டேசர்
14. அம்மன் சந்நிதி
15. பாஸ்கரன் நவக்கிரகம்
16. துவார சோபை
17. துவார சாலை
18. துவார ஹர்மியம்
19. அந்தர் மண்டலம்
20. அந்தர் ஹாரை
21. மத்ய ஹாரை
22. பாஹ்ய ஹாரை
23. மர்யாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அமைப்பு



ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் மனிதன் ஒருவன் தரையிலே நேராகப் படுத்திருப்பது போன்ற அமைப்பிலே காணப்படுகின்றன.

1. கோயிலின் கருவறை – தலை
2. அர்த்த மண்டபம் - கழுத்து
3. மகாமண்டபம் - மார்பு
4. நிருத்த மண்டபம் - தொடை
5. யாகசாலை - நாபி
6. கொடிமரம், வாகனம், பலிபீடம், - ஆண்குறியாகவுள்ளது.
7. இராசகோபுரம் - பாதம்
8. கருவறை - திருக்கோயிலின் அமைப்பில் இறைவன் எழுந்தருளி இருக்கும் அறைக்கு கருவறை என்று கூறுவர். கர்ப்பக்கிரகம், மூலஸ்தானம் எனவும் அழைப்பர்.

## விமானம்

கருவறையின் மேல் மண்டபத்திலிருந்து சிகரத்துடன் கூடியதாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தளங்களைக் கொண்ட அமைப்பு ஆகும் கருவறையின் அடியில் அமைந்துள்ள உபானம் முதல் ஸ்தூபி வரையுள்ள அமைப்பு விமானம் ஆகும்.

## அர்த்தமண்டபம்

கருவறையோடு சேர்ந்ததாகவும் கருவறையின் அளவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் அங்கத்திற்கு அர்த்தமண்டபம் என்றும், கருவறைக்கு முகப்பில் அமைக்கப்படுவதால் இதற்கு முகமண்டபம் என்றும் அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தராளம்

கருவறையையும், முகமண்டபத்தையும் இணைக்கும் இடையிட்ட அங்க அமைப்பிற்கு அந்தராளம் என்று பெயர். அந்தராளம் என்ற சொல்லிற்கு இடைவெளி, இடைப்பாகம் என்றும் பொருள்.

## சாவகாசாந்தராளம்

முகமண்டபத்திற்கும் மகாமண்டபத்திற்கும் இடையில் அமைக்கப்படும் கட்டிடம் சாவகாசாந்தராளம் ஆகும் பக்கங்களில் படிகளோடு கூடிய வாயில் அமைக்கப்பட்டிருக்கும்.

## மகாமண்டபம்


பெரும்பாண்மையாக முகமண்டபத்திற்கு அடுத்து சிறப்பாக சாவகாசாந்தராளத்திற்கு முன்புறத்தையொட்டி அதனை இணைத்துக் கட்டப்பெறும் திருக்கோயில் அணிகளுடன் கூடிய மண்டபமாகும்.

## திருச்சுற்று (பிரகாரம்)

கருவறையில் எழுந்தருளி இருக்கும் மூலமூர்த்தியை வலம்வந்து வணங்க அமைக்கப்படும் சுற்றுப்பாதை பிரகாரம் எனப்படும். இதனை வடமொழியில் ஆவரணம், பிரகாரம் என்றும் அழைப்பர். திருச்சுற்று ஒன்று தொடக்கம் ஐந்து வரை இருக்கலாம். காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் 5 பிரகாரங்கள் உள்ளன.

1ஆம் பிரகாரம் -அன்னமயகோசம்
2ஆம் பிரகாரம் -பிராணமயகோசம்
3ஆம் பிரகாரம் -மனோமயகோசம்
4ஆம் பிரகாரம் -விஞ்ஞானமயகோசம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சுற்று 1 – 7 வரை இருக்கலாம் இதற்கு உதாரணம் திருவங்கரங்கநாதர் திருக்கோயில் திருச்சுற்றுக்கள் பூ, புவ, சுவ, மகா, ஜனா, தப, சத்திய ஆகிய ஏழு உலகங்களுக்கு அமைந்த நுண்மையில் மாந்தருக்கு ஏழு நுண்ணுடல்கள் என எடுத்துக்காட்டுகின்றது.

## திருச்சுற்றுக்கோயில் (பரிவாரக் கோயில்)


கோயிலின் மூலமூர்த்தியின் பரிவாரங்களுக்கென அதாவது பரிவாரத் தெய்வங்களுக்கு பிரகாரம் மத்தியில் கட்டப்படும் சிறு சிறு கோயில்களுக்கு பரிகாரக்கோயில் என்று பெயர்.

## திருமதில்

கருவறைமண்டபம், மகாமண்டபம், பரிவாரக் கோயில்கள் முதலியவற்றை உள்ளடக்கிய பிரகாரம் திருமதில் எனப்படும்.

## கோபுரம்

திருக்கோயிலின் நுழைவாயிலில் ஒன்று முதல் பதினாறு தளங்கள் வரை அமைத்து வானுயர எழுப்பப்படும் கட்டிடத்திற்குக் கோபுரம் என்று பெயர். இதனை தூலலிங்கம் எனவும் கூறுவர். தொலைவில் வரும்போது மனதில் இறைபக்தி தோன்றுவதற்காக அதனை மிக உயரமாக அமைப்பர் இக்கோபுரத்தில் இறைவனது அருட்செயல்களையும் திருவிளையாடல்களையும் காட்டும் உருவங்கள் சித்தரிக்கப்படும். இதனைப் பார்க்கும் போது இறைவனது முழுமுதற் தன்மையை உணரமுடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிமரம்

படுத்திருந்த மனிதன் முதுகை நிமிர்த்தி எழுந்திருக்கின்ற போது முள்ளந்தண்டெலும்பு எவ்வாறு அமைந்திருக்குமோ அவ்வாறு ஆலயக்கொடி மரம் அமைந்திருக்கும். எமது முள்ளந்தண்டெலும்பின் அடிப்பாகம் குண்டலினி சக்தியின் இருப்பிடமாகும். கொடிமரத்திலே கொடிச்சீலையும் தருப்பைக் கயிறும் சுற்றப்பட்டிருக்கும். கொடிமரம் - சிவத்தையும், நந்தி வரையப்பட்ட சீலை - ஆன்மாவையும், தர்ப்பைக்கயிறு -பாசத்தையும் குறிக்கும்.



துவஜஸ்தம்பமும், பலீபிடம்



தாராசுரம் , நந்திமண்டபம் , பலீபீடம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. அதனை வாழ்க்கைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் கோயிலில் நடைபெறுகின்ற நித்திய, நைமித்திய பூசைகளில் கலந்து கொண்டு இறைவனை மெய்யன்போடு வழிபட்டு வந்தால் எடுத்த காரியம் சித்திக்கும். வாழ்வு வளம் பெறும். பாவவினைகள் நீங்கும். முத்தியும் கைகூடும். எனவே நாமும் அவ்வழியில் வாழ்வோம்.

திரு. த. சிவகுமார்.
விரிவுரையாளர், விசேட கல்வித்துறை,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.S.R PRINTERS, 72, PALALY ROAD, THIRUNELVELY

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org